பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (04.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :39

## ஜே.என்.டிக்ஸிற் காலமானார்



இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஸிற் (வயது - 68) டில்லியில் நேற்றுக் காலை காலமானார்.

மாரடைப்புக் காரணமாக டில்லியிலுள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளராகப் பணியாற்றிய டிக்ஸிற். இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் முக்கிய பங்காற்றியவர்.

இவர் இலங்கைக்கான தூதராக இருந்தபோதுதான் இந்திய அமைதிப்படை இங்குவந்தது.

பின்னர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற காலத்தில் இவர் எழுதிய Assignment Colombo என்ற நூலில் தமிழீழ தேசியத் தலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிரதேசத்தில் நிவாரண நடவடிக்கைகளை புலிகளிடமே ஒப்படைக்கக் கோருகின்றார் ரணில்!

### யாழ்.செல்ல முன் உதயனுக்கு நேற்றிரவு விசேட செவ்வி

கொழும்பு.ஜன.4

"விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளூர்வாசிகளான அவர்களும், அப்பிரதேச மக்களுமே சுனாமி அலைத் தாக்கத்தினால் பாதிப்புற்றோருக்கு உடனடியாக அவசர நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். எனவே, அப்பிரதேசத்தின் நிவாரண வேலைகளை முற்றாக அவர்களிடமே ஒப்படையுங்கள்!

- இவ்வாறு கூறினார் எதிர்க்கட்சித் தலைவரும்,ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட பேரழிவுகளைப் பார்வையிடுவதற்காக நாளை அவர் யாழ்.செல்கிறார்.

அதையொட்டி 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்னிரவு இந்தப் பேட்டியை அவர் வழங்கினார்.

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணியை முன்னெடுக்கும் விவகாரம் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்று கருதுகின்றீர்கள் என அவரிடம் கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது:-



பேரலைத் தாக்கம் ஏற்பட்டதும் தென்னிலங்கையில் உள்ளூர் மக்களும், பொலீஸாருமே உடனடியாகக் களத்தில் இறங்கி, அவசர மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர். எனவே, அந்த மக்களிடம்தான் - அவர்களிடம் தான் - நிவாரணப் பணிகளின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டும். பிரதேசசபை

(16ஆம் பக்கம் பார்க்க)

# அந்நியப் படைகள் குவிவு!

## இந்தியா, அமெரிக்கா, பிரிட்டிஷ், பாக்., பங்களாதேஷ் உட்பட பல நாடுகளின் துருப்புகள் மீட்புப்பணியின் பெயரில் வருகை

கொழும்பு,ஜனவரி4

**ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கிப் பேரழிவுகளைச் சந்தித்துள்ள இலங்கையில் மீட்பு மற்றும் நிவாரன நடவடிக்கைகள் என்ற பெயரில் அந்நியப் படைகள் பெருமளவில் குவிந்து வருகின்றன.**

**பிராந்திய வல்லாதிக்க நாடான, இந்தியா, சர்வதேச வல்லரசு நாடான அமெரிக்கா மற்றும் பிரிட்டன், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பல நூற்றுக்கணக்கில் தமது துருப்புக்களையும் மற்றும் கப்பல்களையும் இலங்கைக்கு அனுப்பி வருகின்றன.**

ஏற்கனவே இந்தியாவின் ஏழு கப்பல்கள் இரண்டாயிரத்துக்கும் அதிகமான துருப்பினரோடு தென்னிலங்கை மற்றும் கிழக்குக் கரையோரங்களில் தரித்து நின்று செயற்படத் தொடங்கியுள்ளன. ஆறு இந்திய ஹெலிகொப்டர்களும் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஹெலிகள், விமானங்கள் தாங்கிய அமெரிக்கக் கப்பல் ஒன்று குறைந்தது ஆயிரத்து ஐந்நூறு கடற்படையினருடன் இலங்கை நோக்கி விரைகிறது. இக்கப்பலுடன் இருபது ஹெலிகள் மற்றும் ஆறு ஹூவர் (காற்று மிதப்பி) படகுகளும் வருகின்றன.

பாகிஸ்தானும் தனது கடற்படையின் இரண்டு கப்பல்களை நானூறு துருப்புகளோடு இலங்கைக்கு அனுப்புகின்றது.

இரண்டு ஹெலிக்கொப்டர்களோடு பி.என்.எஸ். கம்பர் என்ற கப்பலும், நானூறு படையினரோடு பி.என்.எஸ். மோவின் என்ற கப்பலுமே இங்கு வருகின்றன.

இதுதவிர, அவசர கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதற்காகப் பாகிஸ்தான் இராணுவத்தின் பொறியியல் செயலணிப் பிரிவைச் சேர்ந்த 150 படையினர் கொண்ட அணியும் இரண்டொரு தினங்களில் இலங்கை வந்து சேரும் எனப் பாகிஸ்தான் தூதரகப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"ஏழு இந்தியக் கப்பல்கள் இலங்கையில் தரித்துள்ளன. அவற்றுடன் அமெரிக்கக் கப்பல் ஒன்றும் இலங்கையில் தரிக்கப் போகின்றது. இவற்றுடன் சேர்ந்து பாகிஸ்தான் கப்பலும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவிடமும் ஐ.நாவிடமும் ஜனாதிபதியே உதவி கோரினாராம்

கொழும்பு.ஜன.4

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உதவுமாறு நான் அமெரிக்க அரசிடமும் ஐக்கியநாடுகள் சபையிடமும் கோரிக்கை விடுத்தேன். அவற்றிடமிருந்து பெருமளவிலான நிதிப் பங்களிப்புக்கிடைக்கும். இது ஒட்டுமொத்த பிராந்தியத்துக்குமே நன்மையானதாகவிருக்கும்.

- இப்படி திட்டவட்டமாகக் கூறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அமெரிக்கப் படைகள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவது தொடர்பாக இந்திய அரசு அதிருப்தி கொண்டுள்ளது எனச் செய்திகள் வெளிவந்துள்ளநிலையில், என்.டி.ரீவி தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி பேட்டியளித்துள்ளார்.

அந்தப் பேட்டியின்போதே அமெரிக்காவின் உதவியைத் தாம் கோரியமை சரியானதே என்று சாரப்பட ஜனாதிபதி கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

இலங்கையின் வரலாற்றில் இடம்பெற்ற மிகமோசமான அழிவாகச் சுனாமி அழிவைக் கருதுகின்றேன். 30 இற்கும் அதிகமான நாடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தம் பார்க்க ஐ.நா. செயலர் வருகிறார்

### புலிகளின் பகுதிகளுக்கும் செல்வார்?



கொழும்பு.ஜன.4

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் நிலைமையைப் பார்வையிடுவதற்காக ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் இவ்வார இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு வரும் கோபி அனான், 10 ஆம்திகதிவரை இங்கு தங்கியிருப்பார்.

இதற்கான ஏற்பாடுகளை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுவருகிறது. கொழும்பில் நிற்கையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து கோபி அனான் பேசுவார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் அவர் நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்குப் பகுதிக்கும் ஐ.நா. செயலரை அனுப்புவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகின்றது. இதுவிடயமாக அரச சமாதானச் செயலகம், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கைக்கு விஜயஞ்செய்ய முன்னர் கோபி அனான் சுனாமியின் தாக்கத்திற்குள்ளான இந்தோனேசியாவிற்கு விஜயஞ்செய்கிறார்.

ஐ.நா.செயலரின் இந்த விஜயத்தின்போது அவர் நாடுகளின் தலைவர்களை மட்டும் சந்திக்கமாட்டார். மிகவும் பாதிக்கப்பட்டவர்களையும் அவர் சந்திப்பார் என்று ஐ.நா.மனிதநேய விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜேன் ஈக்லண்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ-க)

## ஆழிப்பேரலைக்கு பலியான படையினர் 98 பேர் என அறிவிப்பு

கொழும்பு.ஜன.4

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்குண்டு கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 98 ஆக அதிகரித்துள்ளது என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

ஆறு பேர் உயர் அதிகாரிகள் அடங்கலாக பேரலைகளில் சிக்கிக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. அலைகளால் அடித்துச் செல்

(16ஆம் பக்கம் பார்க்க)

**அதிபர் ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்ட விவரம்**
12 ஆம் பக்கத்தில்.

## ஆழிப் பேரலை காவுகொண்ட மக்களுக்கு நோர்வேயில் அஞ்சலி!

### சொல்ஹெய்ம் உட்பட அரசியல்வாதிகளும் பங்கேற்பு

ஒஸ்லோ.ஜன.4

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கானவர் களை நினைவுகூர்ந்து துயர்பகிரும் நிகழ்வு நேற்று முன்தினம் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் வள ஆலோசனை மையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஒன்றுகூடல் நிகழ்வு தமிழ்க் கலைக்கூட றொமி வளாகத்தில் நடந்தது. நோர்வே நாட்டு மக்கள், அரசியல்வாதிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையானவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இத்துயர் பகிர்வு ஒன்றுகூடலில் நோர்வேயின் பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர் கட்சித் தலைவர் ஜென்ஸ் ஸதொலதனபேர்க், சோசலிஸ இடதுசாரிக் கட்சித் தலைவர் கிறிஸ்ரின் கரல்வோர்கன், சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே நீதி, காவல்துறை அமைச்சர் ஜனார் டோர் மற்றும் ஒஸ்லோ நகரசபைத் தலைவர் ஆரிங்கன் ஆகியோர் நோர்வே அரசின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர்.

ஆழிப் பேரலையின் அனர்த்தத்தால் பலியாகிப்போன மக்களை நினைவுகூர்ந்த நோர்வே அரச பிரதிநிதிகள், உறவுகளை இழந்து தவிக்கும் தமிழ்மக்களின் ஆழ்ந்த துயரில் தாங்களும் உணர்வோடு பங்கெடுத்துக் கொள்கிறார்

(16ஆம் பக்கம் பார்க்க)

# உறவினர் வீடுகளில் உள்ளோருக்கு 15 நாள்களுக்கான உலர் உணவு

## இன்றுமுதல் வழங்குமாறு அரச அதிபர் உத்தரவு

### வடமராட்சிச் செய்தியாளர் எஸ்.தில்லைநாதன்

வடமராட்சி,ஜன.4

'சுனாமி' கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு 15 நாள்களுக்குத் தேவையான உலர் உணவுப்பொருள்களை இன்று முதல் வழங்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலர்களுக்கு நேற்று பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்தோர் முகாம் அல்லாத இடங்களில் தங்கியுள்ளோருக்கு இதுவரை எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், கிராமசேவையாளர்கள், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் விஜிதரன், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி பி.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த முறைப்பாட்டையடுத்து உலக உணவு நிறுவனம் வழங்கிய உலர் உணவுப் பொருள்களை ஒருவருக்கு ஒரு நாளைக்கு 400 கிராம் அரிசி அல்லது மா அல்லது இரண்டும் பருப்பு 60 கிராம், சீனி 30 கிராம் என்ற அளவுப்படி 15 நாள்களுக்குரிய உலர் உணவு நிவாரணத்தை உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கு வழங்குமாறு பணிப்புரை விடுவிக்கப்பட்டது.

அதற்குப் பொறுப்பாக கரவெட்டிப் பிரதேச செயலர் ரி.சத்தியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிவாரணம் பகிரங்கப்படுத்தப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஒரேநாளில் கொடுக்கவேண்டும் என மேலும் அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளோருக்கு மூன்றுவேளையும் நேரகாலத்துக்கு உணவு கிடைப்பதை கிராமசேவையாளர்கள் உறுதிப்படுத்தவேண்டும். நேரம் தப்பி உணவுகளை வழங்கக்கூடாது. மா தட்டுப்பாடு காரணமாக இருநேரமும் (காலையும், இரவும்) பாண் வழங்கக்கூடாது. ஒருவேளை மட்டுமே பாண் வழங்கவேண்டும். மற்றவேளைக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

முகாம்களில் சுகாதார சேவைகள் சீராக இருக்கவேண்டும். மலசலகூடங்கள் இல்லாத இடங்களில் அவற்றை உடனடியாகத் தற்காலிகமாக ஏற்படுத்தவேண்டும்.

வடமராட்சிக்கு வெளியே இருந்து ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் இடங்களிலிருந்தோ மற்றும் இடங்களிலிருந்தோ வந்து வடமராட்சியில் தங்கியிருந்து சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் சுகாதாரத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைவிட மேலதிக கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-173-118)

## பட்டதாரிகள் விவரம் இணையத்தளத்தில்

பட்டதாரிப் பயிலுநர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் தமக்கு நியமனம் கிடைத்துள்ளதா என்ற தகவலை TREASURY. GOB. LK என்ற இணையத்தளத்தில் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஸ்கந்தா ஆசிரியருக்கு அழைப்பு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சகல ஆசிரியர்களையும் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரிக்குத் தவறாது சமுகமளிக்கும்படி கல்லூரி அதிபர் க.சிவாஜி கேட்டுள்ளார். (எ-152)

## கொக்குவில் இந்து மாணவர்களுக்கு!

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சுனாமி அனர்த்தத்தினால் துயருற்றிருக்கும் மக்களுக்கு உதவுவது தொடர்பாகவும் புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல மாணவர்களையும் தவறாது வருகைதருமாறு கல்லூரி அதிபர் பி.கமலநாதன் கேட்டுள்ளார். (4-203)

# சிறார்களுக்கான நலன்புரித் திட்டத்துக்கு ஜேர்மன் தொண்டு நிறுவனம் உதவும்

### நேற்று யாழ்.வந்த ஜயலத் எம்.பி. தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.4

இயற்கை அனர்த்தங்களில் சிக்கி பெற்றோரை இழந்த சிறார்களுக்கு நலன்புரித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஜேர்மனியில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இதனைத் தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களையும் மருந்துவகைகளையும் நேற்றுக்காலை கையளித்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

ஏசியன் - ஜேர்மன் விளையாட்டு பரிமாற்றத் திட்டம் என்ற அரசசார்பற்ற நிறுவனம், ஜேர்மன் சமாதானக் கிராம நிறுவனம் ஆகியன பாதிக்கப்பட்ட சிறார்களின் எதிர்கால வாழ்வுக்காக அவர்களைப் பராமரிக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளன என்றும்-

பாதிக்கப்பட்டவர்கள் தமது விவரங்களை யாழ்.வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ரவிராஜூடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் -

ஜயலத் தெரிவித்தார்.

ஏசியன் ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றத்திட்ட அதிகாரியான டிற்மர் டோரிங் சகிதம் யாழ்ப்பாணம் வந்த ஜயலத் ஜெயவர்த்தன, நேற்றுக்காலை யாழ்.ஆயரை முதலில் சந்தித்தார்.

அதன்பின் யாழ்.ஆஸ்பத்திரிக்கு வந்த அவர், சுனாமியில் சிக்கிக் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து அவசர சிகிச்சைப் பிரிவிற்குரிய வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளை அவர் பதில் பணிப்பாளர் டாக்டர் ரவிராஜூடம் கையளித்தார். சுமார் 10 ஆயிரம் பேருக்கு அவசர சிகிச்சையளிப்பதற்குரிய மருத்துப் பொருள்கள் மற்றும் உபகரணங்களை அவர் கையளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர், பலாலியில் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச் சந்தித்து, பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் படையினருக்கு வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகளை வழங்கினார்.

யாழ்.றோட்டாக்கழகத்திற்கும் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை அவர் கையளித்தார். றோட்டரிக் கழகத்தின் சார்பில் அதன் செயலாளர் திருமதி குகராஜன், பொருளாளர் திருமதி தர்மகுலசிங்கம் ஆகியோர் இந்த மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொண்டனர்.

பிற்பகல் பருத்தித்துறையில் உள்ள நிவாரண செயலணி அலுவலகத்தில் நிவாரணப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் அவர் கையளித்தார். (ஐ-3-5)







நிவாரணப் பொருள்களைக் கையளிப்பது தொடர்பாக கரவெட்டியிலுள்ள புனர்வாழ்வுக் கருமபீடத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறை ஊடக இணைப்பாளர் உரை நிகழ்த்துவதையும் உதவிப்பொருள்களை ஏற்றிவந்த வாகனங்களிலிருந்து அவை இறக்கப்படுவதையும் உதவிப்பொருள்களை எடுத்துவந்த ஜேர்மன் பிரஜைகளையும் படங்களில் காணலாம். டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா முதலாவது படத்திலுள்ளார்.

*(படங்கள்: இ.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

# தண்ணீர்க் கோப்பையின் அடியில் தட்டினாற்போன்றதாம் 'சுனாமி'!

### விஞ்ஞான சஞ்சிகை வர்ணிப்பு

நியூயோர்க், ஜன.4

பூமியின் கடலுக்கடியிலுள்ள மேல்தட்டு திடீரென ஓரிடத்தில் நகர்ந்ததனால் 'சுனாமி' கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது. இது எவ்வாறெனின் தண்ணீர் நிறைக்கப்பட்ட ஒரு கோப்பையின் அடியில் ஒரு தட்டுத்தட்டினால் என்ன நடக்குமோ அது போன்ற நிகழ்வாகும் என்று 'கிறிஸ்ரியன்' மொனிற்றர் என்ற விஞ்ஞான சஞ்சிகை கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பை வர்ணித்துள்ளது.

ரிச்சர் அளவுகோலில் 9.0 புள்ளியாகப் பதியப் பெற்றுள்ள கடலுக்கடியில் ஏற்பட்ட நிலநடுக்கமானது முழு சுமத்திரா தீவையும் சுமார் 100 அடிகள் தென்மேற்கில் நகர்த்தியுள்ளது. அதன் மூலம் சுனாமி உருவாகி தென்னாசியாவிலும் தென்சீனாவிலும் கரையோரப் பகுதிகளில் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

கடலடி ஆய்வாளர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்கள் என்று 'லொஸ் ஏஞ்சலஸ் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'ஸ்டேட்ஸ்மன்' வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூகோளத்தை பூமியதிர்ச்சிகள் தான் மாற்றிவிடுகின்றன. மியான்மாருக்கும் இந்தியாவிக்குமிடையிலான பூமியின் மேல் தட்டுகள் நகர்ந்ததால் பல தொடர் பூமியதிர்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்திய நிலத்தட்டின் மீது மியான்மார் தட்டு 40 அடி அளவில் நகர்ந்துள்ளது. இது வொரு சாதாரண நான்கு மாடிக் கட்டடத்தின் அளவு என்று கொள்ளலாம்.

இதனால், இந்தியத் தட்டு மத்திய நிலைக்கு மேற்கிலுள்ள கால்வாய்க்குள் இறங்கத் தொடங்கியது. இந்தக் கால்வாய் ஒரு கணவாய் போன்று இந்தியா - மியான்மர் மற்றும் ஆஸ்திரேலிய பெருநிலப்பரப்புக்களுக்கிடையிலான சமுத்திரத்தின் அடியில் காணப்படுவது.

ஞாயிறன்று தோன்றிய அனர்த்தம் இந்தியப் பகுதியிலுள்ள பூமியின் தட்டு மற்றதன் கீழ் இறங்கியதால் ஏற்பட்டதாகும். இவ்வாறு அமெரிக்க ஆய்வு இணையத்தளம் தெரிவித்துள்ளது. (ப)

# நிவாரணப் பணிகளை ஒன்றிணைக்க வணிக ஒன்றியத்தினர் நடவடிக்கை

### வர்த்தகர்களுடன் தனித்தனிச் சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண மற்றும் உதவிகளை ஒருமுகப்படுத்தி, பயனுள்ள - ஆக்கபூர்வமான - வழியில் உரியவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் நிதித்துறை வணிக ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

நிவாரண உதவிகளை ஒருங்கிணைப்பது தொடர்பாக வணிக ஒன்றியத்தினர், யாழ்.வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்களை இன்றும் கொழும்பு வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களை எதிர்வரும் சனிக்கிழமையும் நண்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் சந்திக்கவிருக்கின்றனர்.

தமிழர் தாயகப் பிரதேச நிவாரண நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டுள்ள வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள், தனிப்பட்ட வர்த்தகர்கள், நலன்விரும்பிகள் போன்றோரை இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-க)

# கோதுமை மா தடையின்றி அனைவருக்கும் விநியோகம்

### அமைச்சர் ரோஹித்த அறிவிப்பு

கொழும்பு,ஜன.4

கோதுமை மா தட்டுப்பாடின்றி அனைவருக்கும் வழங்கப்படும். லொறி மூலம் மாத்திரமல்ல ரயில் மூலமாகவும் மா கொழும்புக்கு கொண்டுவரப்படும். செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு உயர் தொழில்நுட்ப தேசிய அபிவிருத்தி நிறுவனங்கள் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு மாவுக்குத் தட்டுப்பாடு இல்லை என்கிறது. ஆனால், பொதுமக்களுக்கு மா கிடைக்கவில்லை. ஒரு கிலோ மாவை 35 ரூபா முதல் 40 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றரே என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர்.

இப்பொழுது தினசரி 2 ஆயிரம் மெட்ரிக் தொன் மா லொறிகள் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்படுகிறது. இதற்கு மேலதிகமாகத் தினசரி 450 மெட்ரிக் தொன் மாவை ரயில் மூலம் கொண்டுவர விசேட ரயில் சேவையொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது தொகுதி மா நேற்றுக் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டது.

நாட்டின் சகல பாகங்களுக்கும் மா விநியோகத்தைத் துரிதப்படுத்தும் வகையில் மேலதிகமான முகவர்களையும் நியமிக்கும்படி பிறிமா நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம கூறினார்.

சில வர்த்தகப் பெருச்சாளிகள் திட்டமிட்டு செயற்கையான மா தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகின்றனர். இதுதொடர்பான இரகசிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த மோசடிப் பேர்வழிகள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம கூறினார். (ஐ)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை அடிப்படையில்

# ஆயிரம் ஆசிரியர் நியமனம்: பெயர் விவரங்கள் இவ்வாரம்

திருகோணமலை,ஜன.4

வடக்கு-கிழக்கில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து ஆயிரம் ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்தின் கீழ் நியமனம் பெறுபவர்கள் விவரம் இவ்வார இறுதியில் வெளியாகும் என்று மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைகள் பூர்த்தியாகி, தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் பணி தற்சமயம் நடைபெற்று வருகின்றது என்றும்-

வார இறுதியில் நியமனம் பெறுபவர்களின் விவரம் வெளியாகும் என்றும் -

அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சமயம் தோற்றமுடியாதுபோன ஒரு தொகுதியினருக்கான நேர்முகப்பரீட்சை மீள நடைபெறும் என்றும் - அவர் சொன்னார். (ஐ-3)

# அந்தமான் தீவில் நிலநடுக்கம் நீடிக்கிறது; நேற்றுமுன்தினம் மட்டும் 4 அதிர்வுகள்!

## சுமாத்திராத் தீவில் இதுவரை 90 அதிர்வுகள்!!

புதுடில்லி,ஜன.4

அந்தமான் தீவில் நிலநடுக்கம் தொடர்ந்து நீடிக்கிறது. அங்கு நேற்றுமுன்தினம் மட்டும் 4 முறை பூமி குலுங்கியது.

இந்தோனேஷியா நாட்டின் அருகே உள்ள சுமாத்திரா தீவில், கடலுக்குள் ஏற்பட்ட பயங்கர பூமி அதிர்ச்சி எதிரொலியாக, இந்துமகா சமுத்திரத்தில் பயங்கர அலைகள் உருவாகி கரைப் பகுதியை தாக்கின.

'சுனாமி' என்ற இந்த பேரலைகளால் இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, அந்தமான் தீவுகள் போன்ற 13நாடுகளில் பலத்த உயிர் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டது.

அந்தமான் - நிக்கோபார் தீவுகள், இராட்சத அலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன. அங்கு சுனாமி ஓய்ந்தபின், அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் மட்டும் 4 முறை அங்கு பூமி அதிர்ந்தது. அதிகாலை 3.53 மணிக்கு, கிழக்கு கார் நிக்கோபார் தீவில் 5 ரிச்டர் அளவில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

2ஆவது அதிர்ச்சியின் அளவு 5.5 ரிச்டராக இருந்தது. அதிகாலை 3.58 மணிக்கு கமோர்டா என்ற இடத்தில் இந்த அதிர்ச்சி பதிவானது.

நிக்கோபார் தீவில் 3 ஆவது பூமி அதிர்ச்சி காலை 4.42 இற்குப் பதிவாகியிருக்கிறது. இதன் அளவு 5 ரிச்டர்.

4ஆவது முறையாக, மாலை 5.43 மணிக்கு 5.2ரிச்டர் அளவுக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த பூமி அதிர்ச்சிகளால் ஏற்பட்ட சேத விவரம் உடனடியாகத் தெரியவில்லை.

கடந்த சனிக்கிழமை இரவு 10.59 மணிக்கு கார் நிக்கோபார் தீவில் 5 ரிச்டர் அளவில் பூமி அதிர்ந்தது.

'சுனாமி' உருவான சுமாத்திராத் தீவிலும் நேற்றுமுன்தினம் 4 முறை அதிர்ச்சி ஏற்பட்டது. இதன் அளவு அதிகபட்சமாக 6.3 ரிச்டராக இருந்தது.

சுமாத்திராத் தீவில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட பெரிய பூமி அதிர்ச்சியை தொடர்ந்து, இதுவரை 90 முறை சிறிய அளவில் பூமி அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## மரீனா கடற்கரைக்கு செல்லத் தடை

மரீனா கடற்கரைக்குள் செல்ல பொதுமக்களுக்கு நேற்றுமுன்தினம் தடை விதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் வெகு தூரத்தில் நின்று கடல்அலையை வேடிக்கை பார்த்தனர்.

சுனாமி என்னும் ராட்சத அலை தாக்குதல் சம்பவம் நடைபெற்று 8 நாள்கள் ஆகிவிட்டன. எனினும் அச்சம் காரணமாக மக்களை அங்கு செல்லப் பொலீஸார் அனுமதிக்கவில்லை.

சென்னை, சீனிவாசபுரம், காசிமேடு, நொச்சிகுப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டு தான் இருக்கிறது. கடற்கரை ஓரங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் அழுகுரல் சத்தமும் ஓயவில்லை.

# சுனாமிப் பேரலைகளின் கோரத் தாண்டவம் பலியானோர் எண்ணிக்கை 2 லட்சத்தை எட்டலாம்

அசே.ஜன.4

சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்தை எட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்ப்பில் இந்தோனேஷியாவில் நிவாரணப்பணிகள் நடைபெற்றுவருகின்றன. சுவீடன் நாட்டுத் தொண்டர்களும் அங்கு மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எதிர்பார்ப்புக் குறித்து சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கூறுகையில்-

சுனாமி பேரலைகளின் கோரப் பசிக்கு இதுவரை ஒரு லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் குழந்தைகள், இன்னும் ஏராளமானவர்கள் தொற்று நோயால் உயிரிழக்கும் அபாயம் உண்டு. எனவே, இறந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்தை எட்டிவிடும் - என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாவ் யுதோயோனோ கூறுகையில் தெரிவித்ததாவது:-

பிறந்திருக்கும் புத்தாண்டு சோகமயமான புத்தாண்டாகும். இந்தோனேஷியாவில் இன்னும் அழுகுரல் ஓயவில்லை.

லட்சக்கணக்கானவர்கள் வீதி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இறந்த உயிர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம் - செலுத்துகிறேன். நமது நாட்டு நிவாரணப் பணிகளுக்கு அமெரிக்கா மிகப்பெரிய அளவில் உதவியுள்ளது. - என்றார்.

பூமியதிர்ச்சி மற்றும் சுனாமிப் பேரலைகளால் சுமாத்திராத் தீவில் மிகப் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கு அமெரிக்க நிவாரணக் குழுவினர் மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். 'அங்கு நிலத்தைத்தோண்டத் தோண்ட சடலங்களாகவே வருகின்றன. இதனை விவரிக்க மிகக்கடினமாக உள்ளது.' என்று அவர்கள் கூறினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் புத்தாண்டுக கொண்டாட்டங்கள் சோபையிழந்து காணப்பட்டன.

கெட்தீவில் நடந்த புத்தாண்டு நிகழ்ச்சியில் மக்கள் மெழுகுவர்த்தியை ஏற்றி பிரார்த்தனை செய்தனர். ஆஸ்திரேலியாவில் மௌன அஞ்சலி. நிகழ்ச்கள் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் நடைபெற்றன. சிறுவர்களுக்கு 'சுனாமி என்றால் என்ன?' என்று பெற்றோர்கள் விளங்கப்படுத்தினர். உலகில் இந்த வருடப் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் மந்தகதியிலும், சோகமாகவுமே கொண்டாடப்பட்டன. (க-8)

# மாலைதீவில் 42 தீவுகள் முற்றாக நிர்மூலம்!

சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தால் மாலை தீவுக்குச் சொந்தமான 42 தீவுகள் இருந்த இடம்தெரியாமல் அடியோடு அழிந்துவிட்டதாக அந்த நாட்டு ஜனாதிபதி அப்துல் கயூம் தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் தேசிய நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் வியாழக்கிழமை அவர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அப்துல் கயூம் அங்கு மேலும் கூறியதாவது:-

மாலைதீவில் உள்ள 1,192 தீவுகளின் 42 தீவுகள் முற்றாக அழிந்துவிட்டன. மக்கள் வசிக்கும் 13 தீவுகள் முற்றிலும் நாசமடைந்துள்ளன - சேதமடைந்துள்ளன. 29 சுற்றுலாத் தீவுகளுக்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன - என்றார் அவர். (க-8)

# அந்தமானில் சுனாமி ஏற்படுத்திய சேதம்; அழகான கடற்கரைகள் மறைந்தன

போர்ட்பிளேர்,ஜன.4

'சுனாமி' பேரலைகள் தாக்கியதை தொடர்ந்து, அந்தமானில் இருந்த அழகிய கடற்கரைகள் மாயமாய் மறைந்துவிட்டன. சில தீவுகள் 2ஆகப் பிளந்துவிட்டன.

சுனாமி அலைகள், அந்தமானின் கடல் அழகை நாசப்படுத்தி விட்டது. காம்பல் கடற்கரை உட்பட பல கடற்கரைகள் இருந்த இடம் தெரியாமல் மூழ்கிவிட்டன. அந்தமானிலும் அதனையொட்டி உள்ள தீவுகளிலும் கடல் மட்டம் உயர்ந்துள்ளது. டிரிங்கெட் தீவு உட்பட சில தீவுகள் இரண்டாகப் பிளவுபட்டுள்ளன. இந்தத் தகவலை அந்தமான் ஆளுநர் ராம் காப்சே உறுதிசெய்தார்.

சுனாமி தாக்கியபின், போர்ட் பிளேர், பேம்பூ பிளாட் தீவு போன்ற இடங்களில் கடலின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

சுனாமி தாக்கியதால் 'தப்பித்தால் போதும் என்ற நிலையில் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் அந்தமான் தீவைவிட்டு வெளியேறிவிட்டனர். மேலும் பலர் ஹொட்டல் முன்பதிவை ரத்துச்செய்து வருகிறார்கள். இதனால் அங்கு சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (8)

# நாகபட்டினம் மாவட்டத்தில் தோண்ட, தோண்டப் பிணக்குவியல்!

## தமிழ்நாட்டில் பலியானோர் தொகை 8 ஆயிரமாக உயர்வு!

தமிழ்நாட்டில் "சுனாமி" பேரலைகள் தாக்குதலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாக உயர்ந்து விட்டது. நாகபட்டினம் மாவட்டத்தில் தோண்ட, தோண்ட பிணங்கள் குவியலாக கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு லட்சம் வீடு கள், கடல் கொந்தளிப்பால் அழிந்துள்ளன.

தமிழ் நாட்டில் சென்னை, கடலூர், நாகை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடலோரத்தில் வசிக்கும் மீனவ மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

மீனவர்கள் ஆயிரக்கணக்கில் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு சுனாமி அலைக்கு உயிரைபறிகொடுத்தனர். மக்கள் தங்களது வீடுகளை இழந்ததோடு உடைமைகளையும் இழந்து நடுத் தெருவுக்கு வந்தனர். இந்த சுனாமி அலையினால் சுமார் ஒரு லட்சம் வீடுகள் நாசமாகி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

7,793 பேர் பலி, கடல்கொந்தளித்து இழுத்துச்செல்லப்பட்டு பலியானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. நாகை மாவட்டம் தான் அதிகமான மீனவர்களை பறிகொடுத்துள்ளது.

இன்னும் தோண்டத் தோண்ட பிணங்கள் வந்து கொண்டே இருக்கும் அவல நிலைமை தொடர்ந்து நீடிக்கிறது. இதுவரை நேற்றுமுன்தினம் காலை 10 மணிவரை தமிழகத்தில் சுனாமி அலைகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 793 பேர் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை உயரக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

நாகை மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளனர். நேற்று முன்தினம் நாகை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 50 இற்கு மேற்பட்ட பிணங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. அவை மிகவும் அழுகிய நிலையில் இருந்ததால் அதே இடத்தில் எரிக்கப்பட்டன.

கன்னியாகுமரியில் 820 பேர் இறந்துள்ளனர். (8)

# ஐந்து நாள்களுக்கு அமெரிக்கக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமெரிக்க தேசியக் கொடியை ஐந்து நாள்களுக்கு அரைக் கம்பத்தில் பறக்கவிட அதிபர் புஷ் உத்தரவிட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தெற்காசிய நாடுகளைப் பார்வையிட அமெரிக்க வெள்ளை மாளிகைக் குழு செல்லவுள்ளது. இக்குழுவில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், அதிபர் புஷ்ஷின் சகோதரரும் புளோரிடா மாகாண கவர்னருமான ஜெப் புஷ்ஷும் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு நாடுகளிலும் பாதிப்புகள் குறித்து இவர்கள் ஆய்வு நடத்தியபின் அதிபர் புஷ்ஷிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன் பின், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு நிவாரண உதவிகள் மற்றும் மறு சீரமைப்புப் பணிகளுக்கு உதவ அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், பல்லாயிரக் கணக்கானோர் சுனாமிக்கு பலியானதை முன்னிட்டு, அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அமெரிக்கத் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விட அதிபர் புஷ், கடந்த சனிக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி, அமெரிக்காவில் ஐந்து நாள்களுக்கு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

அமெரிக்க கிராபோர்ட் பகுதியில் தனது விடுமுறையைக் கழித்து வரும் புஷ் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் அதன்படி நேற்று திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையில் அமெரிக்கத் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். அரச கட்டடங்கள், இராணுவ முகாம்கள், தூதரங்கள், கப்பல்களில் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். சுனாமியில் உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8)



சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நோக்குடன் இந்தோனேசியாவில் உள்ள நகரமொன்றின் பொழுதுபோக்குப் இடத்தில் நிதி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இஸ்லாமியச் சிறுமிகளைப் படத்தில் காணலாம். (8)

# உறவுகளுக்கு உதவிய நல்லன்பர்களுக்கு நன்றி

பாதிப்புற்றோருக்கு உதவும் உதயனின் நிவாரணப் பணிக்குப் பணமாகவும், பொருள்களாகவும் உதவி செய்த மனித நேயமுள்ள அன்பர்களின் பெயர் விவரங்கள் தொடர்ந்து பிரசுரிக்கப் படுகின்றன.

இயற்கையின் அனர்த்தத்தால் சொல்லொணா இழப்புகளுக்கும் சோகங்களுக்கும் ஆளாகிய உறவுகளுக்கு உடனடி உதவிகளை வழங்க முன்வந்த இரக்கமும் நல்மனமும் கொண்ட உதயன் வாசகர்களுக்கு நன்றி சொல்கிறோம்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது"-என்ற வள்ளுவத்துக்கு இசைவாக உடன் உதவிகளை வழங்கிய அன்பர்களின் பெயர் விவரங்களை இங்கே தருகிறோம்.

## 02.01.2005இல் பணமாக உதவி செய்தவர்கள்

| பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|
| ரி.எஸ்.விஜயரட்ணம் | கொக்குவில் | 1,000.00 |
| ம.கயிலாசபிள்ளை | சரன்ஜா கொமினிகேசன், 538, கஸ்தூரியார் வீதி, யாழ். | 1,500.00 |
| வண.நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸதேரோ | ரஜமகாவிகாரை, நயினாதீவு. | 2,000.00 |
| நயினாதீவு தபாலக ஊழியர்கள் | நயினாதீவு | 1,000.00 |
| திருமதி சுப்பிரமணியம் கண்மணி | 3ஆம் வட்டாரம், நயினாதீவு | 500.00 |
| எஸ்.நாகேந்திரா (லண்டன்) | 'திருவருள்', நவாலிறோட், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| மு.முரளி | நாச்சிமார் கோயிலடி, யாழ். | 500.00 |
| முன்வரவு | | 2,36219 |
| | | 2,52719.00 |

## 02.01.2005 இல் கிடைத்த பொருள்கள்

| | | |
|---|---|---|
| கே.இராசதுரை | 13/2, ஸ்ரான்லி வீதி, யாழ். | உடுப்புவகை |
| திரு.சபாபதி பேரம்பலம் | 172, அரசடி வீதி, கந்தர்மடம் | உணவுப் பொருள்கள், உடுப்புவகை |
| எஸ்.வினித்தா | 246/6, புகையிரத வீதி, நீராவியடி | உடுப்புவகை |
| ம.வசந்தாதேவி | கோண்டாவில் கிழக்கு | பால்மா, உடுப்புவகை |
| ப.நிலாட்ச்சி | 53/7, கன்னாதிட்டி, யாழ். | பால்மா, உடுப்புவகை |
| வண.நவதகலபதுமகீர்த்தி திஸ்ஸதேரோ | ரஜமகாவிகாரை, நயினாதீவு | பால்மாவகை, உடுப்புவகை |
| ஜே.சதீஸ்குமார் | 93, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ் | உடுப்புவகை |
| எஸ்.நாகேந்திரா (லண்டன்) | 'திருவருள்', நவாலி றோட், ஆனைக்கோட்டை | பால்மா, உடுப்புவகை. |
| பூபாலு கோகிலா | அம்மன் வீதி, உரும்பிராய் மேற்கு | உடுப்புவகை. |
| இதயராஜ் சைலா | தாரகா விதவைகளுக்கான மலர்வு மையம், சாவல்காடு, சுதுமலை தெற்கு | உடுப்புவகை. |
| யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் | யாழ்ப்பாணம் | உடுப்புவகை |
| காளிபத்தன் | கன்னாதிட்டி, யாழ் | உடுப்புவகை |
| லோ.வரதன் | சுண்டுக்குழி, யாழ் | உணவுப் பொருள்கள் |
| ஜே.ராஜ்குலேன்ஸ்சன் | கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை | உடுப்புவகை |
| க.பிரதீபராஜ் | 320, கஸ்தூரியார் வீதி, யாழ். | உடுப்புவகை |
| அ.முத்துலிங்கம் | இராசாவின் தோட்டம், யாழ். | உடுப்புவகை. |

---

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர்

**செல்வி யோ.செ.பஸ்தியாம்பிள்ளை**

அவர்களின் அன்புச் சகோதர, சகோதரிகளின் குடும்பத்தினர் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவில் மறைந்தமையையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தி. ஆசிரியர்கள், மாணவர்கள்.

(40413)(26-11-15-13)

## நாளை ஆரம்பம்

**SUBRA (14)**

சித்தன்கேணி

2007 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

05.01.2005 புதன் மாலை 4.00மணி

(C/39877)

## துயர் பகிர்கின்றோம்

எமது ஆசை நண்பன்

**கணபதிப்பிள்ளை தயாபரன்**

அவர்களின் அன்புத் தாயார் 26-12-2004 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தத்தில் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி ஆசிரிய கலாசாலை
ஆரம்பக்கல்வி மாணவர்கள்
2002, 2004.

(சி-40206)(26-11-51-12)

## திரைப்பட வழங்குநர் கூ/ச அறிவித்தல்

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நோக்குடன் எமது சங்கமானது திட்டம் ஒன்றை வரைந்துள்ளது.

எமது சங்கத்தின்கீழ் இயங்கும் திரையரங்குகள், வீடியோக் கடைகள் என்பன யாவும் இன்று முதல் தமது கட்டணங்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை 10ரூபாவால் அதிகரித்து அப்பணத்தை எமது சங்கப் பொருளாளரிடம் வழங்கவேண்டும். குறுகிய லாப நோக்கினை எமது சங்க உறுப்பினர்கள் எவரும் மேற்கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடனேயே இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இது அல்லலுற்றிருக்கும் எமது இன மக்களுக்கான திட்டம் என்பதால் யாவரும் ஏற்றுக்கொள்ளுவீர்கள் என நம்புகின்றோம்.

செயலாளர்,
திரைப்பட வழங்குநர் கூ/சங்கம்.

(40385)(26-11-1512)

## சிவபூமி மனவளர்ச்சி பாடசாலையில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

கோண்டாவில் சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலையில் 2005ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகின.

விடுமுறையில் சென்ற மாணவர்களையும் பாடசாலைக்கு சமுகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டும் புதிய மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற தூர தேசங்களிலுள்ள மாணவர்களுக்கு நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் பஸ் போக்குவரத்துக்கான பருவகாலச் சீட்டுக்களை (சீசன் ரிக்கெற்) இலவசமாக வழங்கவுள்ளது. இதனால் தூரப் பிரதேசங்களிலுள்ள மனவளர்ச்சி குன்றிய மாணவர்களும் இப்பாடசாலையில் இணைந்து கல்வி கற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(3-204)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் சதாஸ் மோட்டோர்ஸ் உரிமையாளரும்
யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின்
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான
திரு.ச.திருச்செல்வராஜன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி சதாசிவம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(40415)(26-11-15-12)

யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம். யாழ்ப்பாணம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபி.சங்கம், ப.மா.சங்கம்.


## நோத்லங்கா தகவல் தொழில்நுட்ப நிறுவனம்

O/L மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.01.2005

### Dip.in Hardware Eng.(One Month)

1st Day Introduction
2.Disassembling of the computer
2nd Day Casing and Power Supply
3rd Day Mother Board
4th Day RAM, ROM Speed, Band width system bus
5th Day Hard drive, Floppy drive, Floppy disk, CD-ROM
6th Day Processor
7th Day VGA Card, Sound Card, Network Card, Modem
8th Day Keyboard, Mouse, Speaker
9th Day Cables & connectors
10th Day Assembling Casing Power Unit, Motherborad, Processor
11th Day I/O card, Memory, Hard drive, Floppy drive, CD drive.
12th Day BIOS setting
13th Day Booting DOS
14th Day Partition
15th Day Operating system Installation
16th Day Configuration of VGA cards, Sound cards&Modems
17th Day About monitor & Printer
18th Day Trouble shooting
19th Day Safety Maintenance
20th Day Software, Virus , Networking

(40414)(12-11-15-12)

Diploma in Software Engineering (6 Months)
Dip.in Internet & E.mail Dip.in Ms Office, Dip.in DTP
பிரதான வீதி, சங்கானை. ☎ 021-4591647 e.mail :- northlankaiit@yahoo.com




இயற்கை அனர்த்தத்தால் உயிர் இழந்தவர்கள் மற்றும்
உறவுகளை இழந்த அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜனவரி 9ஆம் திகதி நடைபெறவிருந்த கணனி கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி நிலையங்களை நாடவும்.

### ASIAN COMPUTER SYSTEMS

| | | | | |
|---|---|---|---|---|
| 2-G. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ : 021-222 5677 | K.K.S. வீதி, சுன்னாகம். ✆ : 071-2501589 | கண்டி வீதி, சாவகச்சேரி. 0773039587 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. ✆ : 077 3122198 | யாழ்சாலை, கிளிநொச்சி. |


## மரண அறிவித்தல்

**அருட்சகோதரி மரீனா சின்னப்பு**

(Sr.Mary of the Cross) தி.கு

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், தற்பொழுது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட்சகோதரி மரீனா சின்னப்பு நேற்று (03.01.2005) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார். இவரது பூதவுடல் இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 10.00 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட் சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்,
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(40410)(39-11-15-12)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# அந்நிய வருகை; அதிக உஷார் அவசியம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய அவசர - அவசிய மனிதாபிமான மற்றும் நிவாரணப்பணிகளை முன்னெடுக்கவும், மீட்பு வேலைகளையும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பல்வேறு தரப்புகள் களத்தில் குதித்திருக்கின்றன.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரை இந்தப் பேரழிவைத் தனித்து முகம் கொடுத்து நிமிரும் வலுவும் பலமும் அற்கு இல்லை. எனவே, சர்வதேச சமூகத்தின் பரோபகாரத்தை அது எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது. சர்வதேச உதவியை தாராள மனப்பான்மையோடு வழங்குமாறு அது வேண்டி நிற்கின்றது. இலங்கையின் அழைப்பு சர்வதேச சமூகத்தின் காதுகளை எட்டியிருக்கின்றது. அதன் உணர்வுகளைத் தட்டி எழுப்பியிருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

ஆசிய நாடுகளில் சுமார் ஒன்றரை லட்சம் பேரைக் காவுகொண்டு, பல லட்சம்பேரை நிர்க்கதியாக்கியிருக்கும் இந்தப் பேரனர்த்தத்திலிருந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீட்டு, அவற்றைக் கட்டியெழுப்புவதற்காக உலக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய மீட்பு, நிவாரண நடவடிக்கைகளில் முழு உலகமுமே மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன எனச் சர்வதேச செய்தி ஏஜென்ஸிகள் கூறுகின்றன.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவவும் பல்வேறு தரப்பினர் இங்கு வந்து குவிந்த வண்ணமுள்ளனர்.

இந்திய கடற்படையின் ஐந்து கப்பல்கள் இலங்கைக் கரைகளில் நங்கூரமிட்டுள்ளன. இரண்டு கப்பல்கள் திருமலையில், மூன்று கப்பல்கள் காலியில், இதுதவிர ஆறு ஹெலிக்கொப்டர்களும் களத்தில் செயற்படுகின்றன. இந்தியத்தரப்பில் ஆயிரத்துக்கும் குறையாத மீட்புப் பணியாளர்கள் அவசர மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அவர்களில் பெரும்பாலானோர் இந்தியப் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள்.

அமெரிக்காவும் ஆயிரத்து ஐந்நூறு கடற்படையினருடன் யுத்தக் கப்பல் ஒன்றை இலங்கைத் தீவுக்கு விரைந்து அனுப்புகின்றது. அந்தக் கப்பலுடன் ஹெலிகொப்டர்கள், விமானங்கள் என்பவையும் இலங்கை வருகின்றன.

பாகிஸ்தானிலிருந்து கடற்படைக் கப்பல் ஒன்று, இரண்டு ஹெலிகொப்டர்கள், சரக்குக் கப்பல் ஒன்று ஆகியவை நானூறு கடற்படையினருடனும் இராணுவக் கட்டுமானப் பிரிவை (பொறியியல் பிரிவை) சேர்ந்த நூற்றியைம்பது துருப்புக்களுடனும் இலங்கை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

பிரிட்டிஷ் துருப்புக்களின் இரு கப்பல்களும் படையினருடன் இலங்கையில் மீட்புப் பணிக்காக வந்து கொண்டிருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கடைசியாக இலங்கைக்குப் பெரிய எண்ணிக்கையில் அந்நிய நாட்டுத் துருப்புகள் வந்தமை 1987 இல் ஆகும். அமைதி காக்கும் பணி என்ற பெயரில் இந்தியத் துருப்புக்கள் அப்போது பல்லாயிரக்கணக்கில் வந்து குவிந்து தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தமை தமிழர் தம் நெஞ்சினின்றும் அகலாத விடயமாகும்.

அப்போது அமைதி காக்கும் பெயரில் படைகள் வந்தன. இப்போது அனர்த்த மீட்புப் பணியில் படைகள் வருகின்றன.

பிரதேச வல்லாதிக்க நாடு ஒருபுறம், சர்வதேச வல்லரசு நாடு மறுபுறம், இரண்டும் அனர்த்தத்திலிருந்து நமது நாட்டை மீட்கும் பணிக்கு உதவி என்ற பெயரில்தான் இங்குவந்து காலூன்றப்போகின்றன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் படை இங்கு அமைதிகாக்க (?) வந்திறங்கிய போது; அந்தப்படை இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலீஸாரின் உயர் தளபதியான ஜனாதிபதியின் கீழ் செயற்படும் என்றே கூறப்பட்டது.

1987 இலும் இந்தியப் படையை இலங்கைக்கு அழைத்தவர் இலங்கை ஜனாதிபதி என்றுதான் கூறப்பட்டது. ஆனால், அப்படி அழைக்கும் சூழ்நிலைக்குப் பிராந்திய அரசியல் வல்லாதிக்க நிலைமை அவரது கழுத்தைப் பிடித்துத்தள்ளியது.

இப்போதும் இயற்கை அனர்த்தம் அப்படி சர்வதேச சமூகத்தை நாட்டுக்கு அழைக்கும் நிர்ப்பந்தத்தை இலங்கை ஜனாதிபதி மீது திணித்திருக்கின்றது.

வேறு வழியின்றி அப்படி அழைத்துவிட்டாலும் அந்நியப் படைகளின் வருகை, அவை நிலைகொள்ளும் போக்கு, அவற்றின் செயற்பாடு போன்றவை குறித்து இலங்கைத் தீவின் தலைமைகள் உஷாராக இருப்பது முக்கியமானதாகும்.

# அனர்த்த கால உளநலப் பணிக்குழு வன்னியில் சேவையை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஜன.4

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உளநலப் பணிகளை ஆரம்பித்துள்ள வளவாளர்களில் ஒரு பகுதியினர் நேற்று வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கும் தமது பணிகளை ஆரம்பித்தனர்.

பாதிக்கப்பட்ட இடங்களில் அவசர உளநலப் பணிகளை மேற்கொள்வதற்காக கடந்தவாரம் சாந்திகத்தில் அனர்த்தகால உளநலப் பணிக்குழுவினால் 110 வளவாளர்களுக்கு தற்போது நடந்த அனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பான குறுங்காலப் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் அனர்த்தப் பாதிப்பிற்குள்ளான இடங்களுக்குச் சென்று தமது உளநலப் பணிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். அவர்களில் ஒருபகுதியினரே நேற்று வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றனர்.

இது தொடர்பாக அனர்த்தகால உளநலப் பணிக்குழுவினர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உளநலம் சார்பாக ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும் அவசரகாலப் பணிகளில் இணைந்து செயற்பட ஆர்வமாக இருப்பவர்களும் மற்றும் இக்குழுவின் ஆலோசனைகள், உதவிகள் தேவைப்படும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதிக்கப்பட்ட இடங்களில் இயங்கும் முகாம்கள், தொண்டுநிலையங்கள் ஆகியவற்றை மேற்படி பணிக்குழுவின் தொலைபேசி இலக்கமான 222 3338 என்ற இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துமாறு அனர்த்தகால உளநலப் பணிக்குழுவினர் கேட்டுள்ளனர்.

(8-203)

# நலன்புரி நன்மைகள் சட்டம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைக்கு

நவாலி, ஜன.4

நலன்புரி நன்மைகள் சட்டத்தை யாழ்.மாவட்டத்தில் நிதி திட்டமிடல் அமைச்சின் நலன்புரி நன்மைகள் சபை அமுல்படுத்த முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இம்மாதம் முதல் சமுர்த்தி நன்மைகள் உதவிகள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வுதவிகளைப் பெறத் தகுதியான மக்களைத் தெரிந்தெடுப்பதற்கு விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாகக் கணக்கெடுப்பாளர் ஒருவரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் வீடுகளுக்குச் செல்லவுள்ளனர்.

அவர்களுக்கு சரியான விவரங்களை வழங்கி அவற்றை உறுதிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிழையான விவரங்களை வழங்கினால் அவற்றைக் கண்டுபிடிக்குமிடத்து அவர்களுக்கு எதிர்காலத்தில் எவ்வித அரச நன்மைகளும் கிடையாதிருப்பதுடன் அதுவரை பெற்ற சகல உதவிகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டிவருமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-100)

# பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள்; வெளிநாட்டுத் தூதர்களுடன் பேச்சு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.4

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான உதவிகளைப் பெறுவதற்கு இந்தியா மற்றும் வெளிநாடுகளின் தூதர்களுடன் பேசவிருக்கின்றேன் என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகமுமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தாளையடி, செம்பியன்பற்று, ஆழியவளை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சுப்பர்மடம் ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களை சுரேஷ் பிரேமச்சந்திரன் சந்தித்தார்.

நிர்க்கதி நிலையில் உள்ள மக்களுக்கு ஆறுதல் கூறிய அவர், மக்கள் மீளக் குடியேறவும் வீடுகளைச் செப்பனிடவும் புதிதாக வீடுகளை அமைக்கவும் அவர்கள் தொழிலை மீள ஆரம்பிக்கவும் வேண்டிய உதவிகளை இந்தியா மற்றும் வெளிநாடுகளின் தூதர்களுடன் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித்தேவைகளையும், குறுகிய கால, நீண்டகாலத் தேவைகளையும், நிறைவுசெய்யும் பொருட்டு பல்வேறுபட்ட செயலணிக் குழுக்களை உருவாக்கத் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பொது நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து அதற்கான தேவைகளை நிறைவேற்றியதுடன், கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய இளைஞர்களுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான அவசர நிவாரணப் பொருள்களையும் அவர் கையளித்தார்.

(ஜ-3)



இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உதவிப்பொருள்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். [ஜ-3]

## வடமராட்சி கிழக்கில்

# பலியானோர் ஒவ்வொருவருக்கும் தலா 10ஆயிரம் ரூபா உதவித்தொகை

வடமராட்சி கிழக்கு, ஜன.4

வடமராட்சி கிழக்கில் கடல் கொந்தளிப்பினால் மரணமானவர்கள் ஒவ்வொருவருக்கும் 10ஆயிரம் ரூபா வீதம் அவர்களது குடும்பத்துக்கு பளை மத்திய கல்லூரியில் வைத்து உதவிக் கொடுப்பனவுகள் யாழ். செயலக அதிகாரிகளினால் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை முள்ளியான், வெற்றிலைக்கேணி, உடுத்துறை, ஆழியவளை கிராம சேவையாளர்கள் பிரிவில் கடல் கொந்தளிப்பினால் மரணமான ஒரு தொகுதியினருக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

ஏனையோருக்கான கொடுப்பனவுகள் நேற்று திங்கட்கிழமை தொடர்ந்து பளை மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன.

(8-182)

## நாளை

*மார்கழி 21*
*புதன்கிழமை*
*(05.01.2005)*
*திதி: தசமி*
*பின்னிரவு: 04.38 வரை*
*நட்சத்திரம் : சுவாதி*
*பின்னிரவு: 01.38 வரை*
*சுபநேரம்: 05.01 - 06.31*
*ராகுகாலம்: 12.31- 02.01*
*(பழையநேரப்படி)*

# வடமராட்சி கிழக்கில் காணாமற்போன சிறுமி வவுனியா வைத்தியசாலையில்!

வடமராட்சி கிழக்கு, ஜன.4

கடல் கொந்தளிப்பின்போது பெற்றோரின் பிடியிலிருந்து கடல் அலையால் அள்ளிச் செல்லப்பட்ட 7 வயதுச் சிறுமி வவுனியா அரசினர் வைத்தியசாலையிலிருந்து பெற்றோரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச்சேர்ந்த திருநாவுக்கரசு ஜினுசா (வயது 7) என்ற சிறுமியே இவ்வாறு பெற்றோரால் வைத்தியசாலையில் வைத்து மூன்று நாள்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது இந்தச் சிறுமியையும், சகோதரியையும் கடல் அலை பெற்றோரிடமிருந்து பறித்துச் சென்றது. பெற்றோரும் ஏனைய சகோதரர்களும் காயங்களுடன் தப்பிப்பிழைத்து மீட்புப் பணியாளரால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்கள்.

மீட்புப் பணியாளர்களும், போராளிகளும் அன்று மாலை ஆழியவளை கிராமத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, முனகல் ஒலி கேட்டதையடுத்து அவ் இடத்திற்குச் சென்று பார்த்தபோது காயங்களுடன் காணப்பட்ட அச் சிறுமியை மீட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

தமது இரு பிள்ளைகளையும் தேடி அலைந்துதிரிந்த பெற்றோர் மூன்று நாள்களின் பின்னர் வவுனியா வைத்தியசாலையில் தி.ஜினுசா என்ற 7 வயதுச் சிறுமியை காயங்களுடன் கண்டுபிடித்தார்கள். அவர்களது காணமாற் போன மற்றொரு மகள் தி.அனுசா (வயது 2) இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளார். (8-182)

## உதயவாக்கு

ஓர் இரகசியத்தை இரகசியமாக வைத்திருக்க வழி, அது இரகசியமான விஷயம் என்பதை இரகசியமாக வைத்திருப்பதுதான்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 38/1, சோமசுந்தரம் அவன்யூ, சுண்டிக்குளி, யாழ். T.P.: 021 222 5964, 021 222 3853. (40402)

## திருமண சேவை

எம்மிடம் பட்டதாரிகள், டாக்டர்கள், லிகிதர்கள், தனியார் நிறுவனத்தில் தொழில்புரிவோர், வர்த்தகர்கள் அத்தோடு லண்டன், சுவிஸ், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் உள்ளனர். தொடர்பு: கமலக்கண்ணன், திருமண சேவை, 286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (40397)

## திருக்குடும்ப கன்னியர்மட மாணவிகளுக்கு

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களையும், மாணவர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு பாடசாலைக்குச் சமுகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

ஜி.சா.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையும் சமுகம் தருமாறு கேட்டுள்ளார். (ஐ-202)

## ST.PATRICK'S COLLEGE, JAFFNA

05th January, 2005. (Wednesday)
Staff Meeting: 9.00 a.m.
Prefects Meeting:10.00 a.m.
***SCHOOL RE-OPENS: 10.01.2005 (MONDAY).***

(சி40204)(42-11-18-26) **- RECTOR.**

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி ஏரம்பமூர்த்தி இராசம்மா**

புன்னாலைக்கட்டுவன், ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் தலைவர்
**திரு.ஏ.உதயகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஏரம்பமூர்த்தி இராசம்மா**
அவர்கள் 26.12.2004 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன். (40411)(39-11-18-26)
ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னராசா ஸ்ரீவிக்கினராசா**

மலர்ந்தது 24-10-1967
உதிர்ந்தது 21-11-2004

நிலையற்ற வாழ்விலே நிலையாக
எதுவுமில்லை கலைகின்ற வேடமிது
கலைவது தான் வாழ்க்கை - எனும்
தலையாய தத்துவத்தின்
தன்மை தனைத் தானுணர்ந்து
தொலைதூரம் சென்றனையோ
எமைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு?

*"எங்கள் கண்களை விட்டு உங்கள் உடல்தான் மறைந்தாலும்*
*எம் நெஞ்சைவிட்டு உங்கள் உருவம் நீங்காது எந்நாளும் வாழ்ந்திடுவீர்!"*

பன்னையம்பதி,
பருத்தித்துறை. (40403)(26-11-18) - **குடும்பத்தினர்.**

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அறிவித்தல்

எமது சகல ஆசிரியர்களையும் மாணவர்களையும் இன்று (04-01-2005) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

யா/க.ம.ம.வி.
யாழ்ப்பாணம். (சி-40199)(26-11-18)
**வி.மாணிக்கம்,** அதிபர்.

## முல்லைத்தீவில் உயிரிழப்பு எண்ணிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.4

'சுனாமி' கடல் அனர்த்தத்தினால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் உயிரிழந்த பொது மக்களின் எண்ணிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தால் திரட்டப்பட்ட புள்ளி விவர அறிக்கை நேற்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகி இருந்தது.

அதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,666 ஆகும். அது தவறுதலாக 16,666என்று அச்சாகி விட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும். (ஐ)

## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

✧ RADIO, T.V., VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ, ரீவி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். *(காலம் 10 மாதங்கள்)*

✧ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இனமோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு SINGLE PHASE, THREE PHASE இணைப்புமுறை என்பன பயிற்சி அளிக்கப்படும். *(காலம் 7மாதங்கள்)*

✧ AIR CONDITIONING and REFRIGERATION சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். *(காலம் 7 மாதங்கள்)*

✧ MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை என்பன ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். *(காலம் 6 மாதங்கள்)*

DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY *(காலம் 12 மாதங்கள்)*

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்**
10-01-2005 (கிழமை நாள்களில்), 09-01-2005 (சனி, ஞாயிறு நாள்களில்)

மேலதிக விவரங்களுக்கு: **Jaffna Technical Institute**
இலக்கம் 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3335, 077 3086716
(26-11-18) (39906)

## SUBRA (14) சித்தன்கேணி

"தகுதியும் திறமையும் எமது ஆசிரியர்களின் தனித்துவப் பண்பாகும்"

**வர்த்தகப் பிரிவு**
Eco. - ஜெயக்குமார்
B.S.T.- நந்தீஸ்வரன்
Acc. - தவா, சுபேஸ்

**கணித, விஞ்ஞானம்**
C.M. - பிரதீபன்
Phy.- வர்ணன்
Che.- தபேசன்
Bio.- கஜன், திவாகர்

**கலைப் பிரிவு**
H.C.- ஸ்ரீஸ்
Tami.- காந்தன்
Geo.- ஜங்கரன்
Drm.- கணேஸ்
Po.Sc.- அசோக்
Hi.- கொங்கா
Cri.- ரொபேட்

**பொது ஆங்கிலம் BRITTO**

*"கடந்த கால மாணவர்களின் பெறுபேறே எமது திறமையின் வெளிப்பாடு"*
நாளைய தலைமுறையின் இன்றைய தெரிவு SUBRA - 2007
A/L ஆரம்பம் 05.01.2005 புதன் - 4.00 மணி

(சி-39875)(26-11-18)

## கல்விச் சமூகத்தினருடனான கலந்துரையாடல்

கோப்பாய்,ஜன.4

'சுனாமி' கடல் பேரனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பான கோப்பாய் கோட்டக் கல்விச் சமூகத்தினரின் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து பாடசாலை ஆளணியினரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-72-202)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 1927 04 11
மறைவு 2004 12 05



திருமதி
**கிட்டிணன் சின்னவள்**

*அரவணைத்து எம்மை அன்பு செய்த தாயே! – உன்*
*உறவினைப் பிரிந்து நாம் இங்கு தவிப்பில்....*
*ஆயிரம் உறவுகள் உலகினில் இருந்தாலும் – உன்*
*உறவுக்கு நிகராக யாருமில்லை*
*எம்மை விட்டு உன் உடல் பிரிந்து பல நாளாகின;*
*ஆனால் உன் நினைவுகள் என்றும் எம்முடன்...*

இன்று (04.01.2005)செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளிலும் மதியபோனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலக்கம், உடுப்பிட்டி. பிரிவால் துயருறும் – குடும்பத்தினர்.

## நாமும் பங்குகொள்கின்றோம்

நாட்டில் ஆழி அனர்த்தங்களினால் பாதிப்புற்று துயர் கொண்டிக்கும் எமது மக்களின் ஆற்றொணாத் துயரத்தில் யாழ்ப்பாணக் கல்லூரிச் சமூகத்தினரான நாமும் பங்குகொள்கிறோம்.

நாளை (05-01-2005) புதன்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட ஆசிரியருக்கான ஞானஒடுக்கம் 10-01-2005 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனையும் கல்லூரியின் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 11-01-2005 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்பதனையும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.
(சி-40197)(26-11-18)

## பளை மத்தியகல்லூரி அகதி முகாமில் இட நெருக்கடி

வடமராட்சி கிழக்கு,ஜன.4

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள பளை மத்திய கல்லூரி முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதனையடுத்து, வத்திராயன், மருதங்கேணி கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள், மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள். (8-182)

## நிவாரணப் பணியை துரிதமாகச் செய்ய பங்கீட்டு அட்டை

வடமராட்சி,ஜன.4

வடமராட்சி கிழக்கிலிருந்து கடற் கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்காக மஞ்சள் நிறத்திலான பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பளை மத்தியகல்லூரியில் வைத்து ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட குடும்பங்களுக்கு இப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டன. (8-182)

## வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கான விசேட சலுகை

எங்கிருந்தும் அழைப்புகளை மேற்கொள்ள
5/= மட்டுமே
இந்தியா 20.00

மேலும் தொடர்ச்சியான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கான எமது அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளுங்கள். (இலவசம்)

**திருமுருகன் கொம்நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

## யாழ்ப்பாணத்தில் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் பயிற்சிக் கல்லூரி M.M.C.C

2005 புதுவருடத்தை முன்னிட்டு பயிற்சி நெறிகளுக்கு கட்டணக் குறைப்பு
50% சிறப்புக் கழிவு
தபால் மூல டிப்ளோமா பயிற்சிநெறி 4மாதங்கள்
ஒலிபரப்பாளர் நேரடிப் பயிற்சி வகுப்பு 3 மாதங்கள்
இக்கட்டணச் சலுகை ஜனவரி 31 மட்டுமே!
3மாத நேரடிப் பயிற்சி வகுப்பு.
பிரிவு I ஜனவரி 15ஆம் திகதி, பிரிவு II ஜனவரி 22ஆம் திகதி பிரிவு III ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

*அறிவிப்பு *நிகழ்ச்சி தயாரித்தல்
*செய்தி வாசிப்பு
*கலையக நிர்வாகம்
*நேர்முக வர்ணனைகள்
*மேடை நிகழ்ச்சித் தொகுப்பு

அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் இணைவதற்கு இப்பயிற்சிநெறி பெருதவியாக அமையும்.

கற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
T.P.: 0776 910612

Jan. 15 புதிய பிரிவு ஆரம்பம்

M.M.C.C.
328, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் (ஆரியகுளம் சந்தி)
(26-11-18) (40398)

# மலசலகூடங்கள் சுத்திகரிக்கப்படாமையால் முகாம்களில் தொற்றுநோய் பரவும் ஆபத்து

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கிறார்

வலி.வடக்கு,ஜன.4

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் பாவிக்கும் மலசலகூடங்கள் துப்புரவு செய்யப்படாமையால் தொற்றுநோய்க்கு உள்ளாகும் பெரும் அபாயம் எதிர்நோக்கப்படுவதாக வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சொலமன் எச்சரித்துள்ளார்.

நெல்லியடியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கைக்கான அலுவலகத்தில் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் அரச அதிகாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி, சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

போதியளவு சுகாதாரத் தொழிலாளர்கள் இன்மையால் பாரிய சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. முகாம்களில் உள்ள மலசல கூடங்களைத் துப்புரவு செய்யத் தற்காலிக அடிப்படையில் தொழிலாளர்களை நியமனம் செய்ய அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய வேண்டுமென அவர் அங்கு கேட்டுக் கொண்டார்.

வயிற்றோட்டம், சின்னமுத்து போன்ற நோய்களுடன் தோல் நோய்களும் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகளும் காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாவிக்கப்படும் குடிதண்ணீருக்கு குளோரின் போடவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. போதியளவு குளோரின் இல்லை. அதனைப் பெற நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறும் முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். கடல் நீரின் மூலம் கொலரா நோய்க்கிருமிகள் பரவுவதற்கான வாய்ப்புகள் கூடுதலாகக் காணப்படுவதனால் கிணறுகள் அனைத்தும் இறைக்கப்பட்டுக் குளோரின் இடப்படவேண்டும். மருந்து தெளிக்கும் கருவி, மருந்து தெளிப்பதற்கான ஊழியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. உடனடியாக மேலதிகமான மருந்து தெளிகருவிகள் மற்றும் தற்காலிக அடிப்படையில் ஊழியர்கள் நியமனம் செய்யப்படவேண்டியதும் அவசியம்.

பல்வேறு அமைப்புக்களும் தொண்டு அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் சுகாதாரப் பணிகளில் ஈடுபடும் அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் இயங்குவதன் மூலம் கூடிய சேவையை மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருப்பதுடன் நேரத்தையும் மற்றும் வீண்விரயங்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மருத்துவ மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புக்கள் நெல்லியடியில் அமைந்துள்ள தற்காலிக சுகாதார அலுவலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார் அவர்.

முகாம்களில் தங்கியுள்ள மக்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளும் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு வழங்கவேண்டிய நோய் எதிர்ப்புக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றமையால் அவற்றை வழங்க வேண்டுமெனவும்,

வைத்திய பரிசோதனைக்கு வேண்டிய அத்தியாவசிய உபகரணங்களான இரத்த அழுக்கம் அளக்கும் கருவி போன்றவை தேவைப்படுவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.(8-5-86)

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் விவரம் திரட்டப்படுகின்றது

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் விவரங்களை இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக்கிளை திரட்டுகின்றது. பாதிப்புற்ற ஆசிரியர்கள் சங்க செயலாளரிடமிருந்து பெற்ற விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ். மாவட்டக்கிளை, கொக்குவில் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை- போர் அனர்த்தங்களினால் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீடுகள் சேதமுற்றிருக்கும் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்தவர்களும் தமது விவரங்களை அனுப்பிவைக்குமாறும் கேட்டுள்ளனர். (8-111-202)

## சிறப்புச் சொற்பொழிவும் ஆராதனையும்

திருநெல்வேலி சத்திசாயி சேவா நிலையத்தினரின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவும், ஆராதனையும் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சாயி நிலையத் தலைவர் ஸ்ரீ.ஐ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடபிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் ஸ்ரீ.இரா.வசந்தசேனன், அறக்கட்டளை நிதியத் தலைவர் ஸ்ரீ.தேசஸ்வரன், ஆலோசகர் ஸ்ரீ.செ.சிவஞானம் ஆகியோர் உரையாற்றுவர்.(8-202-90)

## வடபகுதியில் 3 மாவட்டங்களில்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு மனிதாபிமான உதவிச்செயற்குழு

கொழும்பு,ஜன.4

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு வடபகுதியில் மூன்று மாவட்டங்களுக்கான மனிதாபிமான உதவி செயற்குழுவொன்றினை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

சுனாமி அலையால் என்றுமில்லாதவாறு பேரழிவைச் சந்தித்துள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கே ஜனாதிபதியால் இவ் விசேட செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட செயற்குழுவின் தலைவராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச நிறுவனங்களினதும், முப்படைகளினதும், பொலீஸாரினதும் ஒத்துழைப்பினை இவ் விசேட செயலணி பெற்றுக்கொள்ளும் எனவும், அத்தோடு வவுனியாவில் தங்கியுள்ள பிரான்ஸ் நாட்டு மீட்புக்குழுவினர் தரவுகளை இந்த விசேட செயலணி ஊடாகப் பெற்றுக்கொண்டு தமது சேவையை ஆற்றமுடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை - இலங்கைக்கு வருகை தந்துள்ள ரஷ்ய நாட்டின் மருத்துவக் குழுவினர், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தமது மனிதாபிமானப் பணிகளை ஆற்றுவதற்காக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினூடாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச சமாதானச் செயலகத்திற்கு ஜனாதிபதி பணித்துள்ளார். (8-13)

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன


யாழ்ப்பாணம்,ஜன.4

பரீட்சைத் திணைக்களத்தினால் 2005ஆம் ஆண்டு இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர் (தர்மாசிரியர்) தேர்விற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படும் இப்பரீட்சைகள், தொடர்ந்து வருடந்தோறும் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சைக்குப் பண்டிதர் மற்றும் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களும், ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் இந்துசமயம், இந்துநாகரிகம் என்பவற்றுள் ஒன்றைப் பாடமாகக்கொண்டு சித்தி பெற்றவர்களும் அறநெறிப் பாடசாலை இறுதிநிலை பரீட்சையில் சித்திபெற்றவர்களும் தோற்ற முடியும்.

பரீட்சைக்குத் தோற்றவிரும்புவோர் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248/1/1, காலி வீதி, கொழும்பு என்னும் முகவரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விவரங்களை கடந்தமாதம் 31ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம். (8-204)



பருத்தித்துறை முனைப்பகுதியில் கடல் அனர்த்தத்தினால் அடித்துச் செல்லப்பட்ட காவலரண் ஒன்றை மீள அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)*

# மீன் உண்பதில் மக்களுக்கு அச்சம்!

கடற்கொந்தளிப்பின், விளைவால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியானதையடுத்து இலங்கையர்கள் மீன்கள் உண்ணுவதை நிறுத்தியிருக்கின்றனர்.

கொழும்பு மீன்சந்தையில் இப்போது மீன் விற்பனை என்ற பேச்சுக்கே இடமில்லை. அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது ஆயிரக்கணக்கான மனித உடல்கள் கடலில் மிதந்தன. மீன்கள் இவற்றை உணவாக உட்கொண்டிருக்கலாம் என்ற அச்சம் மக்கள் மனங்களில் எழுந்துள்ளதால் மீன்களை உண்ண மறுக்கின்றனர். இதுதொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் செய்தி குறுந்தகவல் சேவை (SMS) மூலம் செல்லிடப்பேசிகளிலும் பரவிவருகின்றது.

ஆனால், ரின்மீன்கள் மற்றும் ரின்களில் வரும் மீன் உணவுகளை மக்கள் கொள்வனவு செய்கின்றனர். கொழும்பு மீன்சந்தையின் மேற்பார்வையாளர் டபிள்யூ.எஸ்.தர்மவர்த்தனவின் கூற்றை நோக்கினால் களஞ்சியப்படுத்தப்பட்ட மீன்கள் கூட விற்பனையாகாமல் இருப்பது தெரிகிறது.

இந்த நிலை இன்னும் ஒரு வாரத்திற்கு தொடர்ந்தால் இறைச்சி வகைகளுக்கு பெரும் கிராக்கி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படலாம். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது பாவனையாளர்கள் பலரின் கருத்தாக இருக்கிறது. (க-8)

# வடமராட்சி கிழக்கில் மட்டும் 751பேர் உயிரிழந்துள்ளனர்

யாழ்ப்பாணம்,ஜன.4

அண்மையில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தினால் வடமராட்சி கிழக்கில் இதுவரை 751பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேல் காணாமற்போயுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இவ் அனர்த்தத்தினால் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மணற்காடு, தாளையடி, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி உட்பட அனைத்துப் பகுதிகளும் பெரும் சேதத்திற்குள்ளாகின.

இவ் அனர்த்தத்தில் சிக்கி இதுவரை 751 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர். சுமார் ஆயிரத்து 20 பேர் கட்டட இடிபாடுகள் மற்றும் கடல் அலைகளுக்குள் சிக்கிப் படுகாயமடைந்துள்ளனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரத்து 71 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 178 பேர் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும், பாடசாலைகளிலும் வசித்துவருகின்றனர்.

இந்த விவரங்களை முகாங்களுக்கு விஜயம் செய்து விவரம் திரட்டிய மாவட்ட சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் வடமராட்சி கிழக்குக்கான பிரதிநிதி எஸ்.ஸ்ரீபன் தெரிவித்தார்.

நலன்புரி முகாம்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றில் தங்கியிருப்போர் விவரம் வருமாறு:-

| நலன்புரி முகாம்களின் விவரம் | குடும்பங்களின் எண். | அங்க. எண். |
|---|---|---|
| புலோப்பளை ம.வி. | 1,895 | 6,731 |
| தர்மங்கேணி ம.வி. | 244 | 1,032 |
| தர்மங்கேணி கோயில் | 107 | 389 |
| தர்மபுரம் சோளப்பற்று வித்தி. | 382 | 1,319 |
| விசுவமடு ம.ம.வி. | 72 | 265 |
| இயக்கச்சி ம.வி. | 96 | 396 |
| தர்மபுரம் ம.வி. | 48 | 185 |
| விசுவமடு வித்தி. | 45 | 166 |
| கிளிநொச்சி ம.வி. | 182 | 695 |
| மொத்தம் | 3,071 | 11,178 |

(8-5)

# தாளையடி உபதபாலகம் பளை தபால் நிலையத்தில்

வடமராட்சி கிழக்கு,ஜன.4

தாளையடி உபதபால் நிலையம் பளை தபால் நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் தாளையடி உப தபால் நிலையமும் அங்கிருந்த பொருள்களும் சேதமடைந்துள்ளன.

மேலும், அப்பிரதேசத்தில் உள்ள செம்பியன்பற்று உப தபால் நிலையம், ஆழியவளை உப தபால் நிலையம், முள்ளியான் உப தபால் நிலையம்,சுண்டிக்குளம் உப தபால் நிலையம் ஆகியனவும் பலத்த தேதத்திற்குள்ளாகி உள்ளன. (4-182)

# வடமராட்சிப் பகுதிக்கென வைத்திய அதிகாரி நியமனம்

வலி.வடக்கு,ஜன.4

வடமராட்சிப் பகுதிக்கான சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி எஸ். சொலமன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் மந்திகை வைத்திய சாலை அதிகாரியே இப் பதவியையும் வகித்து வந்தார்.

கடந்தவாரம் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக சுகாதார வசதிகளை மேற்கொள்வதில் சுகாதார வைத்திய அதிகாரி இன்மையால் பல்வேறு சிரமங்களையும் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்கம் மற்றும் சுகாதார அமைச்சு என்பவற்றுடன் மேற்கொண்ட தொடர்புகளைத் தொடர்ந்து இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இப் புதிய நியமனத்தைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரியின் நேரடி கண்காணிப்பின் கீழ் சுகாதார செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (8-86)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



வல்வை - கப்பலுடையவர், கம்பர்மலை
பெரிய தம்பிரான் விநாயகர் ஆலய
பிரதமகுரு
சிவஸ்ரீ. ப. செல்வக்குமரக்குருக்கள் - தயாளினி
தம்பதிகளின்
சிரேஷ்ட செல்வப் புதல்வன்
செல்வன்

**பவித்திரன்**
அவர்கள்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் பவித்திரனை வாழ்த்தி மகிழும் அன்புள்ளங்களான அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, மச்சாள், மச்சான், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல விநாயகர் அருளால் பல கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் சீரோடுஞ் சிறப்போடும் நலமுடன் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

(40378)(12-19-15-26)

கெருடாவில் தெற்கு,
பாடசாலையடி, தொண்டமானாறு.

சிவஸ்ரீ. ப. செல்வக்குமரக்குருக்கள் குடும்பத்தினர்.


## விசேட கணனிக் கற்கைநெறி

Certificate in Information Technology

காலம் : 2 மாதங்கள்

கட்டணம் 2,250/-
[ அனைத்துக்கட்டணங்களும் உள்ளடங்கலாக ]

ஆரம்பம் :

Batch 1 [ Week Day ] : 5. 01. 2005
Batch 2 [ Weekend ] : 8. 01. 2005
Ba:ch 3 [ Weekend ] : 23. 01. 2005
at 10.00 a.m.

O/L 2004 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை இக் கற்கை நெறியில் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

அலுவலக ஊழியர்கள், கணனி ஆவலர்கள், உயர்கல்விகற்கும் மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சிறந்த பயிற்சிநெறியாகும். உங்களுக்கென விசேட பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831
Email: iis@sltnet.lk


## நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

நான்காவது ஆண்டு முதலாவது ஆண்டு



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| அம்பலம் சின்னத்துரை | | சின்னத்துரை கமலாதேவி |
| 05-06-1940 | மலர்வு | 22-10-1949 |
| 09-05-2001 | உதிர்வு | 17-12-2003 |

*எம்மை அன்புடன் வளர்த்தெடுத்த அன்புத் தெய்வங்களே!*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்த தாய் – தந்தையரே!*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மறைந்து போனாலும்*
*உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் மறையாது!*

இருவரது ஆத்மாக்களும் இறைவன் திருவடியில் அமைதிபெற்றுச் சாந்தியடையப் பிரார்த்தனை செய்து வணங்குகின்றோம்.

பத்தமேனி.
ஞானவைரவர் கோயிலடி.
அச்சுவேலி.
(40366)(26-19-15)

உங்கள் பாசமிகு தாய்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

## அனர்த்தத்தினால் பலியானவர்களுக்கு பிரார்த்தனைகள்

யாழ்ப்பாணம்,ஜன.4

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில், கடல் கொந்தளிப்பில் பலியான அனைத்துலக மக்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அஞ்சலியும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணிமுதல் யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயப் பரிபாலன சபையின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-202)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.4

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் நடத்தும் பிரார்த்தனை நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களது ஆன்மா சாந்தியடையவும், காயமுற்றவர்கள் குணமடையவும், உற்ற உறவுகள் மற்றும் உடைமைளை இழந்து தவித்து நிற்போர் மன ஆறுதல் பெறவும் வேண்டி நடத்தப்படும் இப்பிரார்த்தனை நிகழ்வில் அனைவரையும் கலந்து பிரார்த்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-204)

## நோயாளர்களுக்கு பணவுதவி

கடற்கொந்தளிப்பினால் பாதிப்புற்று மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு வெளியூர் வைத்திய அதிகாரியொருவர் தலா 500 ரூபா வீதம் உதவு தொகையாக வழங்கியுள்ளார்.

(8-173-118)

## நல்லூர் பிரதேச சபை உதவி

நல்லூர்,ஜன.4

கடற்கொந்தளிப்பு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குடிதண்ணீர் தேவைகளுக்கென தமது பவுசர் ஒன்றையும், கழிவுகள் அகற்றும் இயந்திரம் ஒன்றையும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களையும் நல்லூர் பிரதேசசபை வழங்கியுள்ளது. (8-111)

## பயிற்சி வகுப்புகள் பிற்போடப்பட்டன

நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் 2005ஆம் ஆண்டுக்கான புதிய தையல் பயிற்சி வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன.

இவ்வகுப்புகள் நேற்று திங்கட்கிழமை திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெறவிருந்தன. எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால், பிற்போடப்பட்டுள்ள இவ்வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (8-139-204)


**VISUAL TECH**
கணனி கல்வி நிலையம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு - 1
புதிய வகுப்புகள் 05-01-2005 புதன்கிழமை காலை 9.30மணிக்கு ஆரம்பிக்கின்றது. இவ்வகுப்புகளிற்கு குறிப்பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

பிரிவு - 2
06-01-2005 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது.

**VISUAL TECH**
Station Road, Chunnakam
T.P.: 0777 187943. (40386)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 05 - 1937



உதிர்வு 31 - 12 - 1999

### திருமதி சிவலோகநாயகி குணபாலசிங்கம்

திதி: நவமி

அன்போடு அரவணைத்த அன்னையே!
பண்போடு வாழ்ந்து பரமனடி சேர்ந்தீரோ?
எந்நாளும் உம் நினைவே உள்ளத்தில் மலர்கிறதே!
இந்நாளில் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

உசன்,
மிருசுவில்.
(40373)(26-19-15)

## 31ஆம் நாள் நினைவும்

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



37, கோவில் வீதி,
கண்டுக்குளியைப்
பிறப்பிடமாகவும்
உயரப்புலம்
ஆனைக்கோட்டையை
வதிவிடமாகவும் கொண்ட

அமரர்
**தம்பிப்பிள்ளை மார்க்கண்டு**

(இளைப்பாறிய உயர்நீதிமன்றப் பதிவாளரும், வரிமதிப்பீட்டு திணைக்கள பிரதம லிகிதரும், ஹரிசன் அன் குறொஸ்பீல்ட் லிமிற்றெட் அமுலாக்கல் அதிகாரியும்)

06.12.2004 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து உடன்வந்து எமக்கு ஆறுதல் அளித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (05.01.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்.
ஆனைக்கோட்டை.
T.P. 021 222 5[illegible] (40381)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சின்னையாபிள்ளை

சரவணையைப் பிறப்பிடமாகவும் வேலணை, ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சின்னையாபிள்ளை அவர்கள் 30.12.2004 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவிலுள்ள கன்பராவில் காலமானார்.

அன்னார் சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் - காலஞ்சென்ற மாரிமுத்து தம்பதிகளின் மகளும் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை - காலஞ்சென்ற பார்பதிப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னையாபிள்ளையின் அன்பு மனைவியும் ரகுநாதனின் (கொழும்பு) சிறியதாயும் பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), லோகநாதன் (சட்டத்தரணி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (கொழும்பு), லோகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), அபிராமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை ஆஸ்திரேலியாவில் இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(40380)(46-)

தகவல்:
மு.இரத்தினம் (சகோதரி),
நா.முத்துலிங்கம் (மைத்துனர்).

# சுனாமி பாதித்த நாடுகளுக்கு 447 மில்லியன் அமெரிக்க டொலர்

## உலக வங்கியும், உலக உணவு ஸ்தாபனமும் வழங்கும்

கொழும்பு,ஜன.4

உலக வங்கியும், உலக உணவு திட்ட ஸ்தாபனமும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளின் உடனடி நிவாரணத்துக்கென 447 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முடிவுசெய்துள்ளன.

இதில் 250 மில்லியன் அமெரிக்க டொலரை உலக வங்கி வழங்கும். இந்தோனேஷியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு வழங்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே உள்ள திட்டங்களுக்கான பணத்தை திசை திருப்புவதன் மூலம், எந்தவொரு திட்டத்துக்கும் பயன்படுத்தாது இருக்கும் பணத்தையும் கொண்டு இந்த நிதி வழங்கப்படுவதாக உலக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நாடுகளின் அடுத்த ஆறுமாத காலத்துக்கான அவசரத் தேவைகளுக்கு இப்பணம் பயன்படுத்தப்படும்.

இந்த நாடுகளுக்குத் தேவைப்படும் நீண்டகால புனர்நிர்மாணப் பணிகளுக்காக உதவிகள் பற்றி எதிர்வரும் நாள்களில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் உலக வங்கி அதிகாரி தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உடனடியாக உதவும் திட்டம் பற்றி உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் வுல்பென்சன், ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவுவது பற்றி ஆராய்வதற்காக கொபி அனான் கூட்டிய மாநாட்டில் உலக வங்கித் தலைவர் கலநதுகொண்டுள்ளார். இந்த மாநாட்டில் அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கலந்துகொண்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் நன்கொடை நிதி ஆதாரங்களை ஐ.நா.ஒருங்கிணைந்து உதவும் என்று தெரிகின்றது.

பாதிக்கப்பட்ட நாடுகளின் அரசுகள், அவர்களின் அபிவிருத்தி பங்காளி களான ஐ.நா. ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி போன்றவைகளுடன் உலக வங்கி தொடர்பு கொண்டு நிவாரண உதவிகளை ஒருங்கிணைப்பது பற்றி ஆலோசித்து வருகின்றது.

(ப-8)

## திருவாசக முற்றோதல்

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் சிக்கி இறைபதம் அடைந்தவர்களுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனை வழிபாடும் நடைபெறும்.

## கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் புதிய கற்கை நெறி

வட்டக்கச்சி,ஜன.4

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தில் 'வீட்டு மின் இணைப்பும் மின் உபகரண திருத்தலும்' என்னும் கற்கை நெறி நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

6 மாதகால பயிற்சிநெறிக்கு 35 பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(4-404-204)

## பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் தொடர்புகொள்க

யாழ்ப்பாணம்,ஜன.4

மாகாணங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் எவராகிலும் சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டிருந்தால், தங்களுடன் தொடர்புகொள்ளும்படி இலங்கை சுற்றுச் சூழல் செய்தியாளர் போரம் அறிவித்துள்ளது.

மேற்படி அமைப்பின் ஆசிரியர் தர்மன் விக்கிரமரட்ன பிராந்திய பத்திரிகையாளர்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில், நிலநடுக்கத்தையடுத்து ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் பத்திரிகையாளர்கள் அல்லது அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் நுகேகொடையில் 78 அல்பேர்ட் பெரேரா மாவத்தையிலுள்ள தமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுள்ளார்.

தொலைபேசி இலக்கம் 011-2873131 (ப)

## பருத்தித்துறையில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜன.4

சுனாமி அனர்த்தத்தில் சிக்கி மரணமடைந்த பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குடும்பங்களுக்கு தலா 3ஆயிரம் ரூபா வீதம் கனடா - பருத்தித்துறை ஒன்றியத்தினர் வழங்கிவருகின்றனர்.

இவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கென முதற்தொகுதியாக 4 லட்சம் ரூபாவை கனடா - பருத்தித்துறை ஒன்றியத்தினர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரிடம் வழங்கியுள்ளனர். (3-203)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தொற்று நீக்கி மருந்து விசிறல்!

பரந்தன்,ஜன.4

முலலைத்தீவுப் பிரதேசத்தில் கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தொற்று நீக்கி மருந்துகள் விசிறப்பட்டு வருகின்றன.

இப் பணியினைப் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினரும், அரச சுகாதார மருத்துவர்களும் இணைந்து செய்துவருகின்றனர்.

இதேவேளை - தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் பொதுமக்களை சுகாதாரத்தை பேணுமாறும், சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்குமாறும் தமிழீழ சுகாதார சேவையினரும் சுகாதாரப் பகுதியினரும் வேண்டுகோள்விடுத்து வருகின்றனர்.

(4-352-204)

# சுனாமி அகதிப் பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு

கொரவப்பொத்தானை,ஜன.4

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு திருகோணமலை, கோமரங்கடவெலயில் உள்ள அகதிமுகாமில் தங்கியுள்ள மூன்று பெண்களின் தங்கச் சங்கிலிகளைச் சீருடையினர் சிலா துப்பாக்கி முனையில் அபகரித்துச் சென்றுள்ளனர்.

குச்சவெளியில் இருந்து இடம்பெயர்ந்து கோமரங்கடவெல அகதிமுகாமில் தங்கியுள்ள பெண்களின் சங்கிலிகளே அபகரிக்கப்பட்டன. கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில், குளிப்பதற்காக அப்பெண்கள் குளத்திற்குச் சென்றசமயம் அவர்களைப் பின் தொடர்ந்து வந்த சிலர் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டி மூன்று பெண்களும் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் குறித்து பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக பொலீஸார் தேடுதல் மேற்கொண்டனர். அத்தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவரிடமிருந்து மூன்று தங்கச் சங்கிலிகளும் மீட்கப்பட்டன எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குச்சவெளியைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்டோர் கோமரங்கடவெல அகதிமுகாமில் தங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து உடுத்த உடையுடன் அகதிகளாய் வந்தவர்களாவர். இந்த நிலையில் இப்படியானதொரு சம்பவம் நிகழ்ந்ததையிட்டு அவர்கள் மிகவும் நொந்து போய் உள்ளனர். (க-8)

## கோட்ட, வலய ரீதியாக
# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜன.4

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர் துடைப்புத் தொடர்பாகக் அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் நேற்று முதல் வலய ரீதியாகவும் கோட்ட ரீதியாகவும் இடம்பெறுகின்றன.

சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார்.

கலந்துரையாடல் இடம்பெறவுள்ள திகதியும் இடமும் அழைக்கப்படுவோர் விவரமும் வருமாறு:-

இன்று காலை 9.30 மணி - இந்துமகளிர் கல்லூரி - தென்மராட்சி கல்விக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள். முற்பகல் 10மணி - வீரசிங்கம் மகாவித்தியாலயம் - தென்மராட்சி கோட்ட அதிபர்கள். கொடிகாமம் பகுதி ஆசிரியர்கள் பிற்பகல் 2 மணிக்கு - சாவகச்சேரி இந்துக் கல்லூரி - சாவகச்சேரி மேற்கு பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் - பிற்பகல் 2 மணி - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம் - கோப்பாய் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள். நாளை முற்பகல் 10 மணி இராமநாதன் கல்லூரி - வலிகாமம் கல்வி வலய அதிபர்கள் பிற்பகல் 2 மணி - திருக்குடும்ப கன்னியர் மடம்.

யாழ்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் - 6ஆம் திகதி முற்பகல் 10 மணி -

நெல்லியடி ம.ம.வி - வடமராட்சி அதிபர்கள், ஆசிரியர்கள்.

7 ஆம் திகதி மதியம் 12 மணி - நெடுந்தீவு மகாவித்தியாலயம் - நெடுந்தீவு கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் - காலை 9 மணி - இராமநாதன் கல்லூரி - உடுவில் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் முற்பகல் 11மணி - மல்லாகம் மகாவித்தியாலயம் - தெல்லிப்பழை கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் - பிற்பகல் ஒரு மணி. சண்டிலிப்பாய் அதிபர்கள், ஆசிரியர்கள். பிற்பகல் 3மணி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி- சங்கானைக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள்.

8ஆம் திகதி முற்பகல் 10மணி - வேலணை சரஸ்வதி வித்தியாலயம் - வேலணை அதிபர்கள், ஆசிரியர்கள்.

(3-204)

# மீனவர் சமாசத்திலும் தொடர்புக் கருமபீடம்

'சுனாமி' பேரலைக்குப் பின்னர் சிதறுண்டுள்ள கரையோர மக்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு உரியமுறையில் நிவாரணங்கள் சென்றடைவதைக் கண்காணிப்பதற்குமாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் பருத்தித்துறையில் உள்ள தனது அலுவலகத்தில் 24மணி நேரமும் இயங்கும் விசேட கருமபீடம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தொண்டமானாறு தொடக்கம் குடத்தனைவரையிலான பகுதி மக்களும், வலிகாமம் வடக்கு மக்களும் சிதறுண்ட உறவுகளை ஒன்றிணைக்க தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மூலம் காணாமற்போனோர்கள், காயமடைந்தவர்களைக் கண்டு பிடித்து உறவினர்களுடன் இணைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் மேலாளர் கங்கை அழகன் தெரிவித்தார்.

இதேபோல வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் இதுபோன்ற சிதறிப்போன மக்கள் தொடர்பகக் கருமபீடங்கள் இயங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இம் மக்கள் தொடர்பகக் கருமபீடம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் பற்றிய விவரத்தை சேகரிப்பதுடன், நிவாரணப்பணிகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதனை அவதானிப்பதுடன் அவை மக்களுக்கு சென்றடைகிறதா என்பதையும் பார்த்துக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-173)




சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளையினரால் நடத்தப்பட்ட எய்ட்ஸ் தொடர்பான ஆலோசனை நிகழ்வில் எச்.ஐ.வி - எய்ட்ஸ் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஆ.ஜென்சன் றொனால்ட் உரை நிகழ்த்துவதையும் சங்கத்தின் உறுப்பினர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சுகாதாரப் பணியில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு மட்டக்களப்பில் வாகன வசதிகள் இல்லை!

## உடன்பெற்றுத்தரக் கோருகிறார் வைத்தியசாலைப் பணிப்பாளர்

மட்டக்களப்பு,ஜன.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள டாக்டர்களுக்கு வாகன வசதிகள் இல்லை என்று கூறப்படுகின்றது. அன்றாட சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சிற்றூழியர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இது சுகாதார சேவைகளையே பெரிதும் பாதிக்கும் என மடடக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் டாக்டர் தேவராஜா தெரிவித்தார்.

இப்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் வயிற்றோட்டம், சுவாசத் தொற்று மற்றும் மஞ்சள் காய்ச்சல் (ஈரல் - அலர்ஜி)போன்ற நோய்கள் மக்களை அதிகளவில் தாக்கியுள்ளன.

அகதி முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்காணித்து அவசர சிகிச்சைகளை வழங்க 15 வைத்தியக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் டாக்டர் தேவராஜா கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து சகல சடலங்களும் அப்புறப்படுத்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுவிட்டன என்றும் - தொடர்ந்தும் சடலங்கள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. அவற்றை உடனுக்குடன் புதைத்து விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

வைத்தியசாலையில் கடமையாற்றிய சிற்றூழியர்களும், துப்புரவுத் தொழிலாளர்களும் சுனாமி அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. அன்றாட சுத்திரிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அகதிமுகாம்களில் தங்கியிருப்பவர்களின் சுகாதார நடவடிக்கைகளைக் கவனித்துவரும் வைத்தியர்களுக்கான வாகன வசதிகள் இல்லை. பெரும் அசௌகரியங்களுக்கிடையில் இந்த வைத்தியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

தற்காலிகமாகவேனும் சிற்றூழியர்களையும், வைத்தியர்களுக்கான வாகனங்களையும் வழங்கவேண்டுமெனப் பணிப்பாளர் தேவராஜா அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுடன் இப்பொழுது வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகையும் அதிகரித்துள்ளதால் அகதிமுகாம்களில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

தற்பொழுது தேவைக்குப் போதுமான மருந்துவகைகள் கையிருப்பில் இருக்கின்றன என்றும் வைத்திய கலாநிதி தேவராஜா தெரிவித்தார். (க-8)

**A/L 2007** கலை, வர்த்தகப் பிரிவுகள்

**2005 Paper Class A/L2006**

தமிழ் - எம்.சுரேஸ்
இ.நா. - கந்த.சத்தியதாசன்
அளவையியல் - P.கமல்
அரசறிவியல் - பொன். சந்துரு
நாடக அரங்கியல் - I.சத்தியா
பொது வினா - T.திருமுருகன்
கணக்கீடு - N.சதீஸ்
பொருளியல் - P.சண்
வணி.கல்வி - K.சாந்திநாதன்

ஆரம்பம் ஜனவரி 05 முதல் காலை 9.00 மணி

DEGREE COLLEGE HIGHER STUDIES
342, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி அருகில்
யாழ்நகர்.

0395)(26-15-18-12) - நியூட்டன்.

## சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை

ஜெனிவா,ஜன.4

சுனாமி தாக்குதலுக்குள்ளாகி வீடுவாசல்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகி தவிக்கும் தென்னாசியாவைச் சேர்ந்த 50 லட்சம் மக்களுக்கு நிவாரணமும் மருத்துவ உதவிகளும் வழங்குவதற்கென 40 மில்லியன் அமெரிக்க டொலருக்கு உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த 30லட்சத்துக்கும் 50 லட்சத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான மக்கள் அடிப்படை வசதிகளின்றித் தவிக்கின்றார்கள். அவர்கள் உயிருடன் இருக்க, சுத்தமான நீர், போதுமான தங்குமிடம், உணவு மற்றும் சுகாதார வசதிகள் தேவைபடுகின்றன என்று உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

(ப)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
செல்வி கோமதி பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ஈஸ்வரி பாலசுப்பிரமணியம்


அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி — அதிபர்,ஆசிரியர், மாணவர்கள், அலுவலக ஆளணியினர்.

(40401)(12-15-18)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

வையத்துள் அறிமுகம் : 23.03.1948
தெய்வத்துள் சங்கமம் : 03.12.2004



எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன?
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
உங்கள் சிரித்த முகம் எங்கே?
இமைப்பொழுதில் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திய
அன்புத் தெய்வமே!
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை ராசனே?
உயிராய் நேசித்த உன் உறவுகளைப் பிரிந்து
சென்றாலும்
துயில் கொண்ட உங்களை மறக்கமுடியவில்லையே?
பாசமலர் என்ற ஆலமரம் சாய்ந்து மாதம்
ஒன்றான போதும்
ஆறாது உங்கள் சோகம்!
அகலாது உங்கள் நினைவு!!
உங்களது ஆத்மா ஆண்டவன் பாதமதில்
அமைதியடையட்டும்
ஓம் சாந்தி ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அமரர்
### கிருஷ்ணபிள்ளை தில்லைநடராசா
(ராசன்)
(கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை)

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தியறிந்து நேரில் வந்து பங்குபற்றியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் அன்னாரின் இறுதியாத்திரையின்போது பூதவுடலை அவர் இல்லத்தில் இருந்து தாவடி இந்து மயானம் வரை மழை என்றும் பாராமல் பேழையைச் சுமந்து சென்ற அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் பங்குபற்றித் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுடன்,
தாய், மனைவி, மகள், சகோதரர்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

(40399)(12-15-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமசேகரம் நகுலாம்பிகை



இலக்கம் 65,அம்மன் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சோமசேகரம் நகுலாம்பிகை 02.01.2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சோமசேகரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் சோமாவதி (லண்டன்), சோமலதா, சோமரஞ்சிதன் (சுவிஸ்), சோமரசி (பிரான்ஸ்), சோமரஞ்சினி, சோமஜெகன் (லண்டன்), சோமகௌசி ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியபாலா (லண்டன்), தர்மசேனா (விலங்கியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிறிதேவி (சுவிஸ்), இந்திரகுமார் (பிரான்ஸ்), அருமைலிங்கம் (துபாற்கந்தோர்-மீசாலை) ஆகியோரின் அருமை மாமியாரும் நிதூர்விகா (யா/புனித பொஸ்கோ வித்தியாலயம்), துவாரகன் (லண்டன்), ஜதூர்சினி, சஞ்சஜ் (பிரான்ஸ்), சயன் (பிரான்ஸ்), அஸ்மிதன் (லண்டன்), ரோகான் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.65. அம்மன் வீதி,
கந்தர்மடம். (40396)(12-15-18)

தகவல்:
அ.சோமசேகரம் (கணவர்).

### திருமதி கனகரட்னம் தங்கம்மா



மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி கனகரட்னம் தங்கம்மா 01.01.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (CTB கோண்டாவில்) அன்பு மனைவியும் திருமதி சரஸ்வதி, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் ரவீந்திரநாதன் (மில்ரவி), பத்மநாதன் (பிரான்ஸ்), திருமதி ஈஸ்வரிதேவி தியாகராஜா, லோகநாதன் (லண்டன்), கௌரிதேவி (பிரான்ஸ்), உமாதேவி (பிரான்ஸ்), ஜெயநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயரும் திருமதி தயாநிதி ரவீந்திரநாதன், தியாகராஜா (ரெலிகொம், யாழ்ப்பாணம்), திருமதி காஞ்சனாதேவி பத்மநாதன், ரவீந்திரநாதன், சந்திரகுமார், திருமதி சாந்தினிதேவி லோகநாதன் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் மோகனராஜா, கோகுலராஜா, ரஜீவி, ரஜிதா, சுஜிதா, அஜிதா, தர்ஷன், கர்ஷன், பிரதாபன்,நிராம்சன், விநோத், சுதர்சன், சந்தீரின், அனிதாரகா, றம்மியா, அலன், அஸ்வினி ஆகியோரின் பேர்த்தியாரும் சரண்யாவின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*பழைய நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*
(40400)(12-15-18)

தகவல்:
ரவீந்திரநாதன் (மில்ரவி-மகன்),
தியாகராஜா (மருமகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு : 08.03.1979
உதிர்வு : 05.12.2004



*கருணையின் உருவமே கருணா!*
*பல கோடி இன்னல்களின் மத்தியிலும்*
*பல்கலையும் பயிலும் பல்கலைக்கழகம்*
*சென்ற நீயும் பட்டம் பெற்று*
*பார் புகழும் கல்விமானாய்*
*வருவாய் என்ற நம் கனவை*
*நனவாக மாற்றாமல் எங்கு*
*சென்றாயோ?*
*உனைத் தேடியே தவிக்கின்றோம்.*

இன்று (04.01.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
### இளையதம்பி கருணா
(யாழ்.பல்கலைக்கழக இந்துமெய்யியல் கலைப்பீட 2ஆம்வருட மாணவன்)

-குடும்பத்தினர்.

நாச்சிமார் கோயிலடி,
கரணவாய் வடக்கு.

(40392)(12-15-180)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 08 |
| 11 | 12 |
| 1941 | 2004 |



### சின்னய்யா நவரத்தினம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (05.01.2005) புதன்கிழமை காலை 8மணிக்கும் சாட்டி வெள்ளைக்கடற்கரை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 07.01.2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மரணச்சடங்கின்போது வருகைதந்தவர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பண்ணை வீதி,*
*நாரந்தனை, ஊர்காவற்றுறை.*

திருமதி ந.மகேஸ்வரி
(மனைவி).

(40391)(12-15-18)

# சுனாமி பேரனர்த்தம் : அவர்கள் சொல்லும் அவலக் கதைகளைச் சற்றே காது கொடுத்துக் கேளுங்கள்...

சுனாமி - எதிர்பார்த்தே இருக்காத ஒரு பேரவலத்தினைக் குறிக்கும் வார்த்தையாக மாறி விட்டது. நடந்துமுடிந்த அனர்த்தத்தி னதும், அழிவுகளினதும் ஆதிக்கத்திலிருந்து எம்மை எல்லாம் விடுவித்துக்கொண்டு, எங்களை ஏற்றி நிற்கும் பூமியில் நம்பிக்கையோடு வாழ்வை நகர்த்தவேண்டிய யதார்த்தத்தில் நாம் எல்லோரும் உள்ளோம். எமக்கு வரக்கூடிய ஆபத்துக்கள் குறித்த அறிவுடனும், அவதானத்துடனும் இருப்பதென்பது, அவற்றில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு நாம் புரியும் முதலாவது முயற்சியாக இருக்கும். அந்தவகையில் எம்மைச் சூழ்ந்த சுனாமி பற்றிய அறிவை இப்போதே பெற்று அதுகுறித்த பயத்திலிருந்து எம்மை பாதுகாப்பது காலத்தின் முக்கிய தேவையாகும். "Time and tide wait for no man" என்ற ஆங்கில பழமொழியில் கூறப்பட்டுள்ளது போல் நேரமும் வெள்ளமும் எந்த மனிதனுக்காகவும் காத்திருக்கப்போவதில்லை. நாம் தான் காலத்தையும் சூழலையும் எதிர்கொள்ளும் வல்லமை பெறவேண்டியவர்களாக உள்ளோம்.



### சுனாமி என்பது.....

சுனாமி எமக்குமட்டுமல்ல எல்லோருக்குமே இது ஒரு பொது எனிமி - enemy (எதிரி)தான். இது எம்மைவிட அதிகம் பகைத்துக்கொள்வது ஜப்பானியர்களையே. 1896இல் ஜப்பானில் ஏற்பட்ட கடும் சுனாமி 7மாடிக கட்டடம் வரை இராட்சத அலைகளை உண்டாக்கி 26,000 பேரைப் பலிகொண்டது. Tsunami என்ற வார்த்தை கூட ஜப்பானிய மொழியை சேர்ந்ததே. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு Harbor Wave (துறைமுகஅலை) என்பதாகும். ஜப்பான் மொழியில் Tsu என்பது துறைமுகத்தையும், nami என்பது அலையையும் குறிப்பதாக உள்ளது. சாதாரண மக்களால் இது சூரிய, சந்திர ஆகர்ஷண சக்தியால் வரும் அலை (Tidal wave) எனவும், விஞ்ஞானவாக்கத்தால் பூகம்பக் கடல் அலைகள் (Seismic sea waves) எனவும் அழைக்கப்பட்டன. எனினும் இது தனித்து பூகம்பத்தால் மட்டும் உருவாகாததாலும் சூரிய சந்திர சக்திகளுடன் தொடர்பற்றிருப்பதாலும் இப்பெயர்கள் கூட பொருத்தமற்றனவாகவே உள்ளன. எனினும் கரையைத் தாக்கி மக்களை பலிவாங்கும் இந்த இராட்சத அலைகள், அடிக்கடி துறைமுகங்களையும் அங்குள்ள பெறுமதியான சொத்துக்கள் மற்றும் மனிதர்களை அழித்துச் செல்வதால் 'துறைமுக அலை' என்ற பெயரே பிரபல்யமாகிவிட்டது.

### சுனாமி எப்படி உருவாகிறது?

சமுத்திரங்களில் சமநிலையில் காணப்படும் நீர்த்திணிப்பு (Water mass) எந்த விதத்திலாவது பாரியளவில் குழப்பமடையும்போது இவ்வலைகள் உருவாக்கப்படுகின்றன. அதாவது கடல் அடிப்பகுதியில் உள்ள நிலப்பரப்பில் எரிமலைகள் வெடிப்பதாலோ, கடலுக்கடியில் பிரமாண்டமான நிலச்சரிவுகள் ஏற்படுவதாலோ பூமிக்கடியில் உள்ள தகடுகள் அசைவதாலோ கடலின் அடிப்பகுதி குழப்பமுறுகின்றது. இக்குழப்பத்தால் கடலின் அடிப்பாகம் சிலசமயம் மேலே உயருகின்றது. சிலசமயம் கீழே தாழ்கின்றது. எப்படி ஆயினும் இங்கே நடக்கும் மாற்றம் அமைதியாக உள்ள நீர்நிரலைத் திடீரென குழப்பத்திற்குள்ளாக்கும். கடலின் அடிப்பாகத்தில் அதிக பரப்பளவு இவ்வாறு மேல் எழும்போது அல்லது கீழ் போகும்போது குழப்பமடைந்து சிதறும் நீர்த்திணிவு ஈர்ப்புசக்தியினால் தனது முந்திய சமநிலையை அடைய முயலுகையில் பெருமளவு சக்தி உருவாகி இங்கு பாரிய அலைகள் தோன்றி கரை நோக்கிப் பயணிக்கின்றன. இங்கு உருவாகும் சக்தி ஏறத்தாழ 2,000 ஐதரசன் குண்டுகள் வெடித்த விளைவைத் தரக்கூடும் என்றார் ஆய்வாளர் ஒருவர்.

### சாதாரண அலைகளும் சுனாமி அலைகளும்

கடற்கரையில் நாம் சாதாரணமாகக் காணும் அலைகள் காற்றின் தாக்கத்தால் உருவாகுபவை. இவ்வலைகளே பௌர்ணமி தினங்களில் சந்திரனின் ஈர்ப்பு சக்தி காரணமாக சற்று அதிகம் எழுந்து விழும். இதனைத்தவிர நடுக்கடலில் புயல் தோன்றும் வேளைகளில் பெரிய அலைகள் தோன்றுவதுண்டு.

மிகக் குறுகிய அலை நீளத்தை உடையவையாகவும், (ஓர் அலையின் உச்சிக்கும் அடுத்த அலையின் உச்சிக்கும் இடையிலான தூரம் - படத்தைப் பார்க்க) பல மீற்றர் உயரமானதாகவும் இவ்வலைகள் காணப்படும். இவ்வலைகளாலேயே அடிக்கடி எமது கடற்பரப்பில் இருக்கும் படகுகளும் சிறிய கப்பல்களும் சிலசமயம் கவிழ்ந்து விடுவதுண்டு. இது புயலின்போது புயலின் மையத்தைச் சுற்றி ஏற்படும் கடற்கொந்தளிப்பு காரணமாக அமைவதுண்டு. இது சுனாமி அலையிலிருந்து பல விடயங்களில் வேறுபட்டது. இத்தகைய சாதாரண அலைகளின் அலை நீளம் பொதுவாக 100 தொடக்கம் 200மீற்றருக்கு உட்பட்டது.




5 தொடக்கம் 10 செக்கன் வரையிலான அலை நேரத்தை உடையது.

ஆனால், சுனாமி அலைகள் மிகவும் ஆழமான கடற்பரப்பில் பயணிக்கின்ற போது இதன் அலை நீளம் மிக நீண்டதாகவும் (500 கிலோ மற்றருக்கு அதிகமான) அலை நேரம்- 10 நிமிடம் தொடக்கம் 2 மணித்தியாலங்களை உடையதாகவும் இதன் உயரம் ஒருசில அடிகளாகவுமே காணப்படும். நடுக்கடலில் பார்க்கும் போது சுனாமி அலை பயணம் செய்யும் கடலின் மேற்பரப்பு சலனமற்றதாகவே புலப்படும். சுனாமி அலைகளால் நடுக்கடலில் எந்த விதமான ஆபத்தும் ஏற்படமாட்டாது. நடுக்கடலில் கொந்தளிப்பு இருக்க மாட்டாது. இதன் நீண்ட அலை நீளமே இதன் மேற்படி இயல்பிற்குக் காரணமாகும்.

### சுனாமி அலையின் கரை நோக்கிய பயணம்

கடல் கீழ் நில நடுக்கத்தாலோ, எரிமலையாலோ உருவான சுனாமி அலைகள் மிக அதிகளவான வேகத்தில் கரை நோக்கித் தன் பயணத்தை ஆரம்பிக்கும் பொதுவாக ஆழம்குறைந்த நீரலைகள் பயணம் செய்யும் நீர்நிலையின் ஆழத்திற்கும் புவியீர்ப்பு ஆர்முடுகலினதும் ($G = 9.8$ m/s/s) பெருக்கத்தின் வர்க்கமூலப் பெறுமதியே அந்த அலையின் வேகமாகக் கணிக்கப்படும். உதாரணமாக 4000m ஆழமுள்ள கடலில் ஒரு சுனாமி அலை 700km/h இல் பயணிக்கும். இந்த அலை மிக நீண்ட அலை நீளம் உடையதாகையால் மிகக்குறைந்தளவு சக்தியை செலவழித்துக்கொண்டே முன்னேறக்கூடியது. இது நகர்ந்து செல்வதற்கு மிகமிகக் குறைந்த சக்தியே செலவழிக்கப்படுவதால் இவ்வலை கரையைத் தொடும்வரை ஏறத்தாழ ஒரே விசையுடன் சென்று அங்கு பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன்வேகம் இது பயணிக்கும் கடலின் ஆழத்துடன் நேர்விகித தொடர்பாக இருப்பதால் கரையை அடையும் வேகத்தினுள் எவ்விதமான வீழ்ச்சிகளும் ஏற்பட வாய்ப்பில்லை. மணிக்கு 600 முதல் 700 கிலோமீற்றர் வேகம் என்பது ஏறத்தாழ ஒரு ஜெட் விமானத்தின் வேகத்திற்கு ஒப்பானது.

ரீ.ரீ.மயூரன்

இவ்வாறு மிகவேகமாக அதிக சக்தியுடன் வரும் சுனாமி அலைகள் கரையை அடைகையில் நீர் நிரலின் ஆழம் திடீரெனக் குறைவதால் மிக அதிக அளவிற்கு ஏறத்தாழ 30-40 அடி உயரத்திற்கு மேல் எழுந்து பாய்கிறது. சில சமயங்களில் 100அடி கூடப் பாய்ந்துள்ளதாகப் பதிவுகள் உள்ளன. 1958 ஜூலையில் வடஅமெரிக்காவின் வடமேற்குக் கோடியில் அலாஸ்காவில் லிதுயா விரிகுடாவில் ஏற்பட்ட சுனாமிதான் இதுவரை தாக்கியவற்றில் மிக உயரமானது. இது 516 மீற்றர் வரை எழுந்து பாய்ந்துள்ளது. அத்துடன் கரையில் பாயும் இவ்வலைகள் பல நூறு மீற்றர்வரை ஊருக்குள் ஊடுருவலாம். கடலில் முடிவடையும் ஆறுகள் வழியாகவும் ஊடுருவலாம்.


### சுனாமி அலையின் வருகையை முன்னரே அறியமுடியுமா?

ஆம்! அவதானமாக இருப்பின் சுனாமி அலையில் இருந்து தப்புவதற்குச் சாத்தியங்கள் உள்ளன. ஜப்பான் மற்றும் அமெரிக்கப் பகுதிகளில் சுனாமி வருகையை மூன்று முறைகளில் கண்டறிகின்றனர்.

1) சுனாமி அலைகள் வந்து தாக்குவதற்கு முன்னதாகக் கடற்கரைகளில் உள்ள நீர் திடீரென சில மீற்றர்கள் வரை உள்நோக்கிப் போய் விடுகின்றது. இவ்வாறு கடற்கரைகளில் நீர் திடீரென உள்நோக்கிப் போகுமாயின் அடுத்த சில மணிக்குள் சுனாமி அலை வருவதற்கான சாத்தியம் இருப்பதை அறிந்துகொள்ளமுடியும். மேலைநாடுகளில் கடற்கரைகளில் நீர்மட்டத்தை அளக்கும் கருவிகளைப் பொருத்தி இதனைக் கண்காணிக்கின்றனர்.

2) செயற்கைக் கோள் மூலம் கடலுக்குள் நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி உருவாகுவதை உடனடியாகக கண்டறிந்து முன்னெச்சரிக்கை செய்யமுடியும். ராட்சத அலைகள் கரையைத் தாக்குவதற்கு முன்னதாகவே இதை அறிந்து கொள்ளமுடியும். இது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதை, படத்தில் பார்த்துத் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். ஹவாய் தீவில் அமைந்துள்ள சர்வதேசக் கடல் வள ஆய்வு மற்றும் பாரிய கடல் அலைகள் தொடர்பான ஆய்வுமையம் இவ்வாறான முன்னெச்சரிக்கைத் தகவலை 15 நிமிடத்துள் வெளியிட்டபோதும் தகுந்த தொழில்நுட்பம் மற்றும் அவதானிகள் இன்மையால் இலங்கை மற்றும் இந்தியா மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. சுனாமி தாக்கிய பின்னர்




கூட பலர் வேடிக்கை பார்க்கப் போய் பலியாக வேண்டிவந்தமை மிகப்பெரிய சோகம். இதற்குக் காரணம் இச்சுனாமி அலை பற்றிய முன்னறிவு இல்லாமையே ஆகும்.

3) எந்தெந்த பகுதிகளில் எவ்வெவ் காலங்களில் இத்தாக்கம் நடைபெறுகிறது என்ற முன் எதிர்பார்ப்பின்மூலமும் இதிலிருந்து தப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உதாரணமாக பசுபிக்கில் உள்ள ஹவாய்தீவில் ஆண்டொன்றுக்கு ஒரு சுனாமி தாக்குதல் ஏற்படுவதால் முன்னெச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

### சுனாமி ஏற்படும் போது....

★ சுனாமித் தாக்குதல் அறிகுறிகள் காணும் போது உடனடியாக மேட்டுநிலப் பகுதி நோக்கி விரையவேண்டும். பொருள்கள் எடுப்பதற்காகவோ, விடுப்புப் பார்ப்பதற்காகவோ நின்றால் இறுதியில் உயிரையே கைவிடவேண்டி வரும்.

★ முக்கியமாகப் பிள்ளைகளை முன்னரே



புதிய தொழில்நுட்பம். ஆழ்கடல் கருவிகளைக் கொண்டு சுனாமிகளை எதிர்வுகூற முயற்சி எடுக்கப்படுகிறது.

அனுப்பிவிடல் வேண்டும், நீங்கள் சுனாமி குறித்து அவதானித்தவற்றை உரக்கத் தெரிவித்தபடி ஓடிவிடலாம்.

★ நில அதிர்வு பற்றி உணர்ந்து கொள்ளும் பட்சத்தில் உடனடியாக மேட்டுப் பகுதி நோக்கிச் சென்றுவிடல் அவசியம்

★ மேட்டுநிலம் நோக்கி ஓடும்போது கால்வாய், வாய்க்கால் அருகில் இல்லாத பாதைகளால் ஓடவேண்டும்.

★ கப்பலில் நிற்கும் போது இவ்வாறான தாக்கம் நடந்தால் குறுகிய நேரத்தில் மிக ஆழமான கடலுக்குள் செல்ல வாய்ப்பிருப்பின் அங்கு செல்வது பாதுகாப்பானது. கரையை நோக்கி ஓடி வருவதை விட.

சுனாமி என்ற சொல் ஜப்பான் மொழியில்

津波

### சுனாமி ஏற்பட்டபின்.....

சுனாமி அலைத் தாக்கம் ஏற்பட்ட பின் உடனடியாக மீண்டும் கடற்கரைக்குச் செல்வதைத் தவிர்த்தல் அவசியம். இவ்வாறான தாக்கம் கடற்கரைப் பிரதேசங்களில் நடைபெறும்போது அங்கு பொருள் சேதமோ உயிர்ச் சேதமோ ஏற்படக் கூடும். எனவே இழப்புக்களை, பிரிவுகளைச் சந்தித்துத் துயரத்திற்குள்ளாகியுள்ள மக்களுக்கு அருகில் இருப்பதும் ஆதரவு கொடுப்பதும்தான் இன்றைய எம் கடமைகளில் தலையாயது. அவர்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்தும் கொடூர அனுபவங்கள் குறித்தும் கதைப்பதற்கு விருப்பப்பட்டால் சற்றுக்காது கொடுத்துக் கேளுங்கள். அவர்களது தற்கால அசாதாரண பிரதிபலிப்புக்களை சாதாரணமாகவே பாருங்கள். "எமக்குத் துணையாக இன்னும் நிறைய மனிதர்கள் உள்ளார்கள" என்று அவர்களுக்குள் ஏற்படும் உணர்வே இதன் தாக்கத்தால் பாதிப்படைந்தவர்களை தேற்றப் போதுமானதாக இருக்கும்.

# அதிபர், ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம்

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் புதிய சம்பளத் திட்டத்தின் விவரங்களை அரசாங்க பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கையாக வெளியிட்டிருக்கிறது. 09/2004 இலக்க 27.12.2004 ஆம் திகதிய சுற்றறிக்கையின் சிங்கள மூலப் பிரதியிலிருந்து அதன் பிரதான விடயங்களைத் தொகுத்து அனுப்பியிருக்கின்றார் தீவக கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் செல்லையா மெற்றாஸ்மயில்.

அதன்படி புதிய சம்பளத்திட்டம் அட்டவணை விவரங்களாக வருமாறு:

மேற்படி சுற்றறிக்கை வாயிலாக மேற்காட்டிய அட்டவணைப்படி தற்பொழுது பெற்றுவரும் அடிப்படைச் சம்பளத்திற்கு நேரொத்த சம்பளப் படிநிலை புதிய சம்பளமாக 01.12.2004இல் இருந்தாலும் 01.12.2004 இல் வழங்கப்படும் சம்பளமானது பின்வருமாறு அமையும்.

1. 30.11.2004 இல் பெற்ற சம்பளத்திற்கும் நேரொத்த புதிய சம்பளப் படிநிலைக்கும் இடையில் காணப்படும் மொத்தச் சம்பள அதிகரிப்பின் 50 வீதமோ அல்லது மாதம் 2500 ரூபாவோ எது கூடுதலாக இருக்கின்றதோ அத்தொகை 30.11.2004 இல் பெற்ற சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு 01.12.2004 இலிருந்து வழங்கப்படும். மொத்த அதிகரிப்பின் மிகுதித் தொகை 01.01.2006 இல் வழங்கப்படும்.

உ-ம்:

A. அதிபர் தரம் I ஐச் சேர்ந்த திரு.சுப்பிரமணியத்திற்கு

| | |
|---|---|
| 09/2004 சுற்று நிருபப்படி 01.12.2004 இல் சம்பளப் படிநிலை வருடம் • | 193920.00 |
| 30.11.2004 இல் பெற்ற சம்பளம் வருடம் | 138480.00 |
| மொத்த அதிகரிப்பு | 55440.00 |

50% அதிகரிப்பு வருடம் - 27720/- மாதம் 2310/-

மாதம் 2500 ரூபாவுக்குக் குறைந்த அதிகரிப்பாகையால் சுற்றறிக்கையின்படி 01.12.2004 இல பெற்றுவந்த சம்பளத்துடன் 2500ரூபா வழங்கப்படும். மிகுதி அதிகரிப்பு (55440 - 30000) 25440/- 01.12.2006 இல் வழங்கப்படும்.

B. இ.அதிபர் தரம் I ஐச் சேர்ந்த திரு. வல்லிபுரத்திற்கு

| | |
|---|---|
| 09/2004 சுற்று நிருபப்படி 01.12.2004 இல் சம்பள படிநிலை | 259200.00 |
| 30.11.2004இல் பெற்ற சம்பளம் | 185040.00 |
| மொத்த அதிகரிப்பு | 74160.00 |

50% அதிகரிப்பு வருடம் 37080/- மாதம் 3090/-

50% அதிகரிப்பானது 2500/- இற்கு மேல் உள்ளதால் சுற்றறிக்கைப்படி 01.12.2004இல் பெற்று வந்த சம்பளத்துடன் 3090/- அதிகரிப்பும் 01.01.2006 இல் 3090/- உம் வழங்கப்படும்.

2. 01.12.2004ஆம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட படிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன.

3. மேலும் பலவிடயங்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றறிக்கை 10.2 இன் படி 01.12.2004இன் பின் ஓய்வுபெறுபவர்களுக்கு ஓய்வுபெறும் திகதியில் ஓய்வூதியக் கணக்கிற்காக இச்சுற்றறிக்கையில் அதிகரிக்கப்பட்ட முழுத்தொகையையும் சேர்த்துக் கணக்கிடப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

T A16-6 இலங்கை அதிபர் சேவை தரம் I
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
138480-4x5520-6x6120-197280

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
193920-4x7740-6x8580-276360

| | | | | |
|---|---|---|---|---|
| | 138480/= | 11540/= | 193920/= | - 16160/= |
| 1 | 144000/= | 12000/= | 201660/= | - 16805/= |
| 2 | 149520/= | 12460/= | 209400/= | - 17450/= |
| 3 | 155040/= | 12920/= | 217140/= | - 18095/= |
| 4 | 160560/= | 13380/= | 224880/= | - 18740/= |
| 5 | 166680/= | 13890/= | 233460/= | - 19455/= |
| 6 | 172800/= | 14400/= | 242040/= | - 20170/= |
| 7 | 178920/= | 14910/= | 250620/= | - 20885/= |
| 8 | 185040/= | 15420/= | 259200/= | - 21600/= |
| 9 | 191160/= | 15930/= | 267780/= | - 22315/= |
| 10 | 197280/= | 16440/= | 276360/= | - 23030/= |

T A16-5 இலங்கை ஆசிரியர் சேவை தரம் I
இலங்கை அதிபர் சேவை தரம் 2.I
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
132960-5/5520,5/6120-191,160

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
186180-5x7740,5x8580-267780

| | | | | |
|---|---|---|---|---|
| | 132960/= | 11080/= | 186180/= | 15515/= |
| 1 | 138480/= | 11540/= | 193920/= | 1616/= |
| 2 | 144000/= | 12000/= | 201660/= | 16805/= |
| 3 | 149520/= | 12460/= | 209400/= | 17450/= |
| 4 | 155040/= | 12920/= | 217140/= | 18095/= |
| 5 | 160560/= | 13380/= | 224880/= | 18740/= |
| 6 | 166680/= | 13890/= | 233460/= | 19455/= |
| 7 | 172800/= | 14400/= | 242040/= | 20170/= |
| 8 | 178920/= | 14910/= | 250620/= | 20885/= |
| 9 | 185040/= | 15420/= | 259200/= | 21600/= |
| 10 | 191160/= | 15930/= - Max | 267780/= | 22315/= |

T A16-4 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2.I
இலங்கைஅதிபர் சேவை தரம் 2.II
15/2003
105420-7x3000-126420

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
147600-7x4200-177000

| | | | | |
|---|---|---|---|---|
| | 105420/= | 8785/= | 147600/= | 12300/= |
| 1 | 108420/= | 9035/= | 151800/= | 12650/= |
| 2 | 111420/= | 9285/= | 156000/= | 13000/= |
| 3 | 114420/= | 9535/= | 160200/= | 13350/= |
| 4 | 117420/= | 9785/= | 164400/= | 13700/= |
| 5 | 120420/= | 10035/= | 168600/= | 14050/= |
| 6 | 123420/= | 10285/= | 172800/= | 14400/= |
| 7 | 126420/= | 10535/= - Max | 177000/= | 14750/= - Max |

T A16 -3 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2.II
இலங்கை அதிபர் சேவை 3
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
82320-12x2460-111840

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
121320-6x2460-6x3480-156960

| | | | | |
|---|---|---|---|---|
| | 82320/= | 6860/= | 121320/= | 10110/= |
| 1 | 84780/= | 7065/= | 123780/= | 10315/= |
| 2 | 87240/= | 7270/= | 126240/= | 10520/= |
| 3 | 89700/= | 7475/= | 128700/= | 10725/= |
| 4 | 92160/= | 7680/= | 131160/= | 10930/= |
| 5 | 94620/= | 7885/= | 133620/= | 11135/= |
| 6 | 97080/= | 8090/= | 136080/= | 11340/= |
| 7 | 99540/= | 8295/= | 139560/= | 11630/= |
| 8 | 102000/= | 8500/= | 143040/= | 11920/= |
| 9 | 104460/= | 8705/= | 146520/= | 12210/= |
| 10 | 106920/= | 8910/= | 150000/= | 12500/= |
| 11 | 109380/= | 9115/= | 153480/= | 12790/= |
| 12 | 111840/= | 9320/= | 156960/= | 13080/= |

T A16 -2 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3.I
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
70140-9x 1320-8x1560-94500

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
109140-9x1320-8x1560-133500

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 70140/= | 5845/= | 109140/= | 9095/= |
| 2 | 71460/= | 5955/= | 110460/= | 9205/= |
| 3 | 72780/= | 6065/= | 111780/= | 9315/= |
| 4 | 74100/= | 6175/= | 113100/= | 9425/= |
| 5 | 75420/= | 6285/= | 114420/= | 9535/= |
| 6 | 76740/= | 6395/= | 115740/= | 9645/= |
| 7 | 78060/= | 6505/= | 117060/= | 9755/= |
| 8 | 79380/= | 6615/= | 118380/= | 9865/= |
| 9 | 80700/= | 6725/= | 119700/= | 9975/= |
| 10 | 82020/= | 6835/= | 121020/= | 10085/= |
| 11 | 83580/= | 6965/= | 122580/= | 10215/= |
| 12 | 85140/= | 7095/= | 124140/= | 10345/= |
| 13 | 86700/= | 7225/= | 125700/= | 10475/= |
| 14 | 88260/= | 7355/= | 127260/= | 10605/= |
| 15 | 89820/= | 7485/= | 128820/= | 10735/= |
| 16 | 91380/= | 7615/= | 130380/= | 10865/= |
| 17 | 92940/= | 7745/= | 131940/= | 10995/= |
| 18 | 94500/= | 7875/= | 133500/= | 11125/= |

T A16 -1 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3.II
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
60900-14x 1320-6x1560-88740

அ.பொ.நி.சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
01.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
99900-14x1320-6x1560-127740

| | | | | |
|---|---|---|---|---|
| | 60900/= | 5075/= | 99900/= | 8325/= |
| 1 | 62220/= | 5185/= | 101220/= | 8435/= |
| 2 | 63540/= | 5295/= | 102540/= | 8545/= |
| 3 | 64860/= | 5405/= | 103860/= | 8655/= |
| 4 | 66180/= | 5515/= | 105180/= | 8765/= |
| 5 | 67500/= | 5625/= | 106500/= | 8875/= |
| 6 | 68820/= | 5735/= | 107820/= | 8985/= |
| 7 | 70140/= | 5845/= | 109140/= | 9095/= |
| 8 | 71460/= | 5955/= | 110460/= | 9205/= |
| 9 | 72780/= | 6065/= | 111780/= | 9315/= |
| 10 | 74100/= | 6175/= | 113100/= | 9425/= |
| 11 | 75420/= | 6285/= | 114420/= | 9535/= |
| 12 | 76740/= | 6395/= | 115740/= | 9645/= |
| 13 | 78060/= | 6505/= | 117060/= | 9755/= |
| 14 | 79380/= | 6615/= | 118380/= | 9865/= |
| 15 | 80940/= | 6745/= | 119940/= | 9995/= |
| 16 | 82500/= | 6875/= | 121500/= | 10125/= |
| 17 | 84060/= | 7005/= | 123060/= | 10255/= |
| 18 | 85620/= | 7135/= | 124620/= | 10385/= |
| 19 | 87180/= | 7265/= | 126180/= | 10515/= |
| 20 | 88740/= | 7395/= | 127740/= | 10645/= |

## ஐ.நா.செயலரின் விசேட பிரதிநிதி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார்

கொழும்பு,ஜன.4

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது பற்றி நேரில் ஆராய்வதற்காக ஐ.நா.செயலர் கொபி அனானின் விசேட பிரதிநிதி மார்க்கிரேட்வோல் ஸ்ரோம் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப்பேசினார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த மார்க்கிரேட் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா.எப்படி உதவலாம் என்பது குறித்து ஆராயவுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீளக் கட்டமைப்பதற்கு ஐ.நா.தொடர்ந்து தனது உதவிகளை வழங்கும் என்று அவர் உறுதியளித்தார்.

ஏற்கனவே ஐ.நா. நிபுணர்குழு ஒன்று இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பாதிப்புக் குறித்து மதிப்பிட்டு வருகின்றது.

ஐ.நா.பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதி நேற்றுமுன்தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜெகத் அபேசிங்கவைச் சந்தித்துத் தற்போதைய நிலை குறித்து விசாரித்தார். (க-8)

## பதிவு செய்யக் கோரிக்கை

குடத்தனை,ஜன.4

வடமராட்சி வடக்கில் சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் தங்கி இருப்போரை அந்தந்தப் பகுதி கிராமசேவையாளரிடம் பதிவு செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் கேட்டுள்ளார். (8-78)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

# வன்னிப் பிரதேச பாடசாலைகளின் சேதவிவரங்கள் வெளியாகியுள்ளன

புதுக்குடியிருப்பு,ஜன.4

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் சேத விவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்த சேத விவரங்களில் கட்டடம், தளபாடம், உபகரணம் என முழுமையாகச் சேதமடைந்த பாடசாலைகளும் பகுதியாகச் சேதமடைந்த பாடசாலைகளும் காணப்படுகின்றன.

முழுமையாகச் சேதமடைந்த, பகுதியாகச் சேதமடைந்த பாடசாலைகளின் சேதவிவரங்கள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன.

முழுமையாகச் சேதமடைந்த பாடசாலைகளான முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு 23.6 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு றோ.க.பாடசாலைக்கு 13.8 மில்லியன் ரூபாவும், கள்ளப்பாடு அ.த.க.பாடசாலைக்கு 9.7 மில்லியன் ரூபாவும் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

பகுதியாகச் சேதடைந்த பாடசாலைகளான வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலைக்கு 6 மில்லியன் ரூபாவும், சிலாவத்தை தமிழ்வித்தியாலயத்திற்கு 3.5 மில்லியன் ரூபாவும், உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்திற்கு 5.5மிலலியன் ரூபாவும், அளம்பில் றோ.க.பாடசாலைக்கு 7.5 மில்லியன் ரூபாவும்,

செம்மலை மகா வித்தியாலயத்திற்கு 7.5 மில்லியன் ரூபாவும், வலயன்மடம் அ.த.க.பாடசாலைக்கு 1.4 மில்லியன் ரூபாவும், அம்பலவன் பொக்கணை ம.வித்தியாலயத்திற்கு 6.7 மில்லியன் ரூபாவும், மாத்தளன் றோ.க. பாடசாலைக்கு 3.5 மில்லியன் ரூபாவும், முள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலைக்கு 4 மில்லியன் ரூபாவும் இழப்பீடு ஏற்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை கிளிநொச்சி மாவட்டக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

(8-203-353)

## அலை அடித்துச் சென்ற இளைஞனின் சடலம் கிணற்றில் மீட்பு!

வடமராட்சி,ஜன.4

ஆழிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டு கிணறு ஒன்றினுள் மூழ்கிக் கிடந்த ஒருவரது சடலம் கடந்த ஞாயிறன்று கண்டுபிடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்தே இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

வல்வெட்டித்துறை கிராம அலுவலரின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டு தொண்டமானாறு காட்டுப்புலத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

ஆதிகோயிலடியைச் சேர்ந்த தர்மகுலராசா இன்பநாதன் (வயது 27) என்பவரது சடலமே அது என்று இனங்காணப்பட்டது.

(ஐ-173)

## பேரலையின் கோரத்தால் பெருகும் மனநோயாளிகள்

ஏறாவூர்,ஜன.4

வடக்கு - கிழக்கில் அண்மையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பலர் மன நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

தமது உடன்பிறப்புக்கள் மற்றும் பெற்ற பிள்ளைகளையும், சொத்துக்களையும் பேரலைக்குப் பறிகொடுத்துவிட்டு எஞ்சியுள்ள பலர் மன நோய்க்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்களே பெருமளவில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பல பெண்களும், வயோதிபர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட வீடுகளின் இடிபாடுகளுக்கிடையிலேயே தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

"அனைத்து சொந்தங்களையும், சொத்துக்களையும் இழந்துள்ள நாம் மட்டும் உயிர் தபபி என்ன செய்ய?" என்று கூறி பாதுகாப்பான பகுதிகளுக்குத் திரும்புவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை வந்து பார்வையிடும் பெண்கள் பலரும் தமக்கு நேர்ந்துள்ள கதி பற்றி நினைத்து அழுது புலம்பி மன நோய்க்கு ஆளாகி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே வடக்கு - கிழக்கு கோரயுத்தத்துக்கு தமது உறவுகளைப் பலிகொடுத்து உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அண்மைய 'சுனாமி'யினாலும் பெரும் உளவியல் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

(ஐ-க)

## கனரக வாகனங்களின்றி மீட்புப்பணிகள் ஸ்தம்பிதம்

ஏறாவூர்,ஜன.4

கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் தொடர்ந்தும் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கு கனரக வாகனங்கள் பெருமளவில் தேவைப்படுகிறது என மீட்புப் பணியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையிலான கட்டட இடிபாடுகளை சாதாரண மனித வலுவினால் அகற்ற முடியாதுள்ளது எனவும் - புல்டோசர்கள், பாரந்தூக்கிகள் போன்ற கனரக இயந்திரங்களே இதற்குத் தேவைப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட இடிபாடுகளுக்குள் சடலங்கள் அகப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் துர்வாடை வீசிவருகின்றது. இடிபாடுகளை அகற்றி சடலங்களை மீட்பதற்கு கனரக வாகனங்களே தேவைப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கனரக வாகனங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு மீட்புப் பணிகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், வடக்கு - கிழக்கு மாகாண கரையோரப் பிரதேசங்களுக்கு கனரக வாகனங்கள் இதுவரை வந்து சேரவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், அரச அதிபர்கள் ஆகியோர் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி கனரக வாகனங்களைத் தருவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களில் சிக்கிக் காணாமற்போனவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற உதவும் வகையில் 'உதயன்' தொடங்கிய தகவல் சேவை விவரப் பட்டியல் நாளை பிரசுரமாகும்.

## பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்வோருக்கு அறிவுறுத்தல்

பரந்தன்,ஜன.4

கடல் அலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லும் மக்கள், அங்குள்ள கிணற்று நீரையோ, அழிக்கப்பட்ட கடைகளிலுள்ள குடிபானவகை, உணவுவகை என்பனவற்றை உணவுக்குப் பயன்படுத்துவதை முற்றாக நிறுத்துமாறு சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

பாதிப்புக்குள்ளான பகுதிகளிலிருக்கும், குடிதண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறிய பின்னர் குடிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது நோய் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியசாலையில் உடனடியாக சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(8-352-204)

## புலோலி நலன்புரி முகாமில் 'அவல நீக்க ஆற்றுப்படையரங்கு'

யாழ்ப்பாணம், ஜன.4

'சுனாமி' ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் அதிர்ச்சியில் இருந்து மீள முடியாதவர்களாக இருப்பதை அடுத்து அவர்களை ஆற்றுப்படுத்தி ஆதரவளிக்கும் 'அவல நீக்க ஆற்றுப்படையரங்கு' நேற்று புலோலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்டது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினரால் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அந்த நலன்புரி முகாமில் உள்ள மக்கள் ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டு தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தியதைக் காணமுடிந்தது.

அனர்த்தம் நிகழ்ந்தபோது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அந்தக் கணத்தில் தாங்கள் பட்ட அவலங்களையும் உறவுகளின் இழப்புக்களையும், தமது மனவேதனைகளையும் மக்கள் வெளிப்படுத்தினார்கள்.

சிறுவர்களுக்கான பிரத்தியேக அரங்காடல் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிகளில் கல்விகற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றிவருகின்றனர். யாழ். கல்விவலய ஆசிரியர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆசிரியர்களும் ஆற்றுப்படுத்தற் செயற்பாட்டில் ஈடுபட முன்வந்துள்ளார்கள்.

இச்செயற்பாடானது யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடைபெற்றுவருகின்றது. அரங்கச் செயற்பாட்டுக்குழுவினருடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களும் அரங்க செயற்பாட்டாளர்களும் மக்களின் அவலம் நீக்கும் அரங்க நிகழ்வுகளில் செயற்பட்டு வருகின்றனர்- என்று அரங்க செயற்பாட்டு குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-173-70)

### டக்ளஸும் உதவி

யாழ்ப்பாணம்,ஜன.4

'சுனாமி' இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நிதிக்கென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் இந்து கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தமது 3மாதகால வேதனத்தை வழங்கியுள்ளார் என்று கட்சியின் சார்பாக தகவல் தொடர்புச் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசினால் வழங்கப்படும் உதவிகள் துரிதமாக, உரிய மக்களிடம் சென்றடைவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-202)

## தொற்றுநீக்கி விசிறும்பணி கரையோரங்களில் ஆரம்பம்

### சகல கிணறுகளுக்கும் குளோரின்

வடமராட்சி,ஜன.4

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகளில் சுனாமி கடற்கொந்தளிப்பினால் கடல் நீர் உட்புகுந்த இடங்களில் தொற்று நக்கி மருந்துகள் விசிறும் பணி ஆரம்பமாகியுள்ளது.

பருத்தித்துறை முனைப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பணி கரையோரப் பகுதி முழுவதும் தொடர்ந்து நடைபெறும்.

இதேவேளை -

கரையோரப் பகுதிகளில் உள்ள அனைத்துக கிணறுகளிலும் குளோரின் இடும் நடவடிக்கைகளும் ஆரம்பமாகியுள்ளன.

தொற்று நீக்கி மருந்து விசிறுதல், கிணறுகளுக்கு குளோரின் இடுதல் ஆகிய பணிகள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.

கிணறுகளுக்குள் சுனாமி கடற்கொந்தளிப்பு உவர் நீர் உட்புகுந்துள்ளமையால் குளோரின் இட்டபின்னர் அவை இறைக்கப்பட்டு தேசிய நீர்வடிகால் சபையினால் பாவனைக்கு உகந்தது என அனுமதிக்கப்பட்ட பிறகே பாவனைக்கு விடபபடும்.

(ஐ-173)

## வீதி சீரின்மையால் பஸ்சேவை ரத்து:

## எழுவைதீவு, அனலைதீவு மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறையின் ஊடாக கண்ணகி அம்மன் கோயிலடி வரை போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை வீதி சீரின்மையினால் கடந்த முதலாம் திகதியில் இருந்து திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் எழுவைதீவு, அனலைதீவு போன்ற இடங்களுக்குக் கடல் மூலம் பயணம் செய்யும் பிரயாணிகள் பெரும் சிரமததை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை வரைக்குமே போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுவதால் கடல் மூலம் பயணம் செய்யும் மக்கள் ஊர்காவற்றுறையில் இருந்து 5கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள கண்ணகி அம்மன் கோயில் வரை நடந்தே செல்லவேண்டியுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப்படும் ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவு, எழுவைதீவு போன்ற இடங்களுக்குப் பயணம் செய்வதற்குப் படகுச் சேவையை ஒழுங்குபடுத்தித் தருமாறும் அல்லது ஊர்காவற்றுறையில் இருந்து கண்ணகி அம்மன் கோயில் வரையான வீதியைப் புனரமைப்புச் செய்து பஸ்சேவையை ஒழுங்குபடுத்தித் தருமாறும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளிடம அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-203)

### பாதிக்கப்பட்ட பொலீஸ் நிலையங்களுக்கு பொலீஸ்மா அதிபர் விஜயம்

காலி மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொலீஸ் நிலையங்களுக்கு பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கடந்த முதலாம் திகதி நேரில் சென்று பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட பொலீஸ் நிலையங்களைப் புனரமைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், முழுமையாகச் சேதமடைந்த இரு பொலீஸ் நிலையங்களைப் புதிதாக அமைக்கவும் தாம் உத்தேசித்துள்ளார் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

(க-8)

## மருத்துவ பீட புதுமுக மாணவர்கள் 10ஆம் திகதிவரை பதிவு செய்யலாம்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இவர்களுக்கான விரிவுரைகள் இம் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. 'சுனாமி' அனர்த்தம் காரணமாக விரிவுரைகள் ஆரம்பமாவது தடைப்பட்டிருந்தது. ஆயினும், மருத்துவபீட புகுமுக மாணவர்களுக்குரிய பதிவுகள் கடந்த மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் திட்டமிட்டபடி நடைபெற்றன. தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் அரைவாசி மாணவர்களே தமது பதிவுகளை இதுவரை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதிவுத் திகதி முடிவுற்றாலும் - மாணவர்களின் நன்மை கருதி - பதிவுகளை இம்மாதம் 10ஆம் திகதிவரை மேற்கொள்ளலாம் என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

ஏனைய பீடமாணவர்களின் அனுமதிகளும் தாமதமாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவர்களின் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

இப்பரீட்சைகள் நடந்துமுடிந்த பின்னரே ஏனைய பீட மாணவர்களின் அனுமதிகள், பதிவுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அநேகமாக ஏனைய பீட மாணவர்களின் விரிவுரைகள் அடுத்தமாதம் முற்பகுதியில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-12)

### உப பணிமனை திறந்துவைப்பு

குடத்தனை,ஜன.4

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் உப பணிமனையொன்று கடந்த சனிக்கிழமை தும்பளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த உப பணிமனையானது சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காகவே விசேடமாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் இயற்கை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கில் தங்கியிருக்கும் மக்களை இந்தப் பணிமனையில் பதிவு செய்யுமாறு மருதங்கேணி உதவி அரச அதிபர் கேட்டுள்ளார்.

(8-78)

**CHEMISTRY** - GROUP CLASSES
2007 A/L DIAS B.Sc.(Hons)
☆ Basic ஆரம்பம்: 05.01.2005 புதன் 3.00 p.m
☆ GENERAL. TUE, WED, FRI - 3.00 P.M.
2005 A/L ☆ இரசாயனச் சமநிலை
☆ அயன் சமநிலை
MON, TUE, WED, THU, FRI - 7.00 A.M.
நாவலர் இன்ஸ்ரிரியூட், ஆனைப்பந்தி. (40405)

**COLLEGE OF KEEN**
128/4, Palaly Road. Thirunelvely.
A/L 2007
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்: 05.01.2005 புதன் காலை 9.00 மணி.
எமது தரமான ஆசிரியர்களால் சகல பாடங்களுக்கான விரிவுரைகளும் நடத்தப்படும்.
கணித, விஞ்ஞான, வர்த்தக A/L 2006
மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.
கலைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.
A/L ஆங்கில வகுப்புகளும் நாளைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளன.
பாடசாலை மாணவர்கள்,
உத்தியோகத்தர்களுக்காக சிங்களமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அனுமதியைப் பெற்றுக்கொள்ள
கீன் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும். (40407)

**ஆங்கில இலக்கிய வகுப்புகள்**
(ENGLISH LITERATURE CLASSES FOR GRADE - 10,11)
By: Mr. K.Rajkumar
Discussion and Analysis on Exam View
ஆரம்பம் : 05.01.2005 புதன் 3.30 p.m.
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



(C-40212)
**தூரிகை நுண்கலை வளாகம்**
2005 இன் புதிய பிரிவுகள்
Hairstyle, Make up
கேக் ஐசிங், தையல்,
சாறி, பஞ்சாபி வேலைகள்,
துணி வர்ணமிடல், பூவேலை,
கைப்பணிகள், சிறுதொழில்,
ஓவியக்கலை, புகைப்படவியல்,
ஓகன், இசைப் பயிற்சி,
அச்சுக்கலை
★ O/L எடுத்த மாணவர்களுக்குத் தனியான விரைவுப் பயிற்சி
★ வாரநாள், சனி, ஞாயிறு வகுப்புகள்
★ பயிற்சி முடிவில் சான்றிதழுடன் சுயதொழில் வழிகாட்டல்
பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்க:-
1. ம.ம.வி. வீதி, நெல்லியடி.
2. செங்குந்தா வீதி, கல்வியங்காடு

# நிவாரணப் பொருள்கள் ஒப்படைப்பு

நவாலி,ஜன.4

ஆனைக்கோட்டை மகாஜனா சனசமூக நிலையத்தினர் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென அப் பகுதி மக்களிடம் சேகரிக்கப்பட்ட சுமார் 5ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண உதவிப் பொருள்களை கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.(8-100)

★ ★ ★

நவாலி,ஜன.4

ஆனைக்கோட்டை தேசிய எழுச்சிப் பேரவையினால் சேகரிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள், மருந்துப் பொருள்கள் என்பவற்றை 'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு வழங்கவென அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (8-100)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் சேகரிக்கப்பட்ட ஒருதொகுதி அனர்த்த நிவாரணப் பொருள்கள் முல்லைத்தீவில் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு பிரதேசங்களிலுள்ள 8 நலன்புரிமுகாம்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இப்பொருள்களை யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட மாணவர்களுடன் இணைந்து வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (204)

# இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களின் விவரம் சேகரிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபுரிந்த இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களின் விவரங்களை 'உதயன்' பணிமனைக்கு அனுப்புமாறு யாழ்.மாவட்டத்தில் செயற்படும் சகல இன்ரறக்ட் கழகங்களின் பொறுப்பாசிரியர்களையும் அதிபர்களையும் யாழ்றோட்டறிக் கழகத்தின் புதிய தலைமுறை இயக்குநர் த.வாமதேவன் கேட்டுள்ளார்.

# மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.4

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமான வடமராட்சியில் அவசர மீட்புப் பணியும், துப்புரவுப் பணியும் செய்வது தொடர்பான கலந்துரையால் இன்று காலை 8 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் யாழ்.பல்லைக்கழகம், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் கல்வியியற் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு பேரவையினர் கேட்டுள்ளனர். (3-202)





சுனாமி பேரனர்த்தம் பாதித்த பகுதிகளில் மக்களை நேரடியாகச்சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்தும் பணிகளில் அரங்கச் செயற்பாட்டுக்குழுவினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

'அவலம் நீக்கும் ஆற்றுப்படை அரங்கு' எனப் பெயரிடப்பட்ட அரங்க நிகழ்வு தொடர்பாக அரங்கச் செயற்பாட்டுக்குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடுவதை முதற்படத்திலும்,

பருத்தித்துறை, மந்திகை வைத்தியசாலைக்குச் சமீபமாக கடைத்தெருக்களில் தங்கியிருந்த மக்கள் மத்தியில் சென்று அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் ஆற்றுகையாளர்கள் மக்களை ஆற்றுப்படுத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.4

பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பெண் சாரணிய வழிகாட்டுநர்களையும் சமுகமளிக்கும் படி, யாழ் மாவட்ட சாரணிய ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை - இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்போர் தொடர்ந்தும் அப்பணிகளில் ஈடுபடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (3-204)

**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2007 கலை, வர்த்தகம், கணித, உயிரியல் வகுப்புக்கள்
எமது Super Grade ஆசிரிய குழு
ஆரம்பம் : 05.01.2005 புதன் 3.00 p.m.
பிரிவு 2 தரம் 1 முதல் O/L வரையான வகுப்புக்கள்
ஆரம்பம் (05.01.2005) புதன் 4.00 p.m.
(சி-40198)

**மரண அறிவித்தல்**

**திருமதி சரஸ்வதி சதாசிவம்**



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, கொண்டலடி விநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸவதி சதாசிவம் அவர்கள் 02.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கால சென்ற செல்லப்பா சதாசிவம் (ஒப்பந்தகா, அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், உரிமையாளர், ஸ்ரீராஜரதம் ரானஸ போட்) அவர்களின் அன்பு மனைவியும் சற்குணராஜன் (ஜேர்மனி), மகேந்திரராஜன் (U.K.), திருச்செல்வராஜன் (உரிமையாளர், சதாஸ் மோட்டோஸ், யாழ்ப்பாணம்), ராஜமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி (ஜேர்மனி), இந்திராணி, கலாவதி (B.A.), காலஞ்சென்ற குற்றாலலிங்கம் (உப அஞ்சலதிபர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜவதனி (பிரான்ஸ்), இராஜறமணி (பிரான்ஸ்), இராஜலோசனி (ஜேர்மனி) ஆகியோரின் பெரியதாயாரும் ஸ்ரீவிக்னேஸ்வரராஜ் (ஜேர்மனி), சர்மிளா (ஜேர்மனி), மகாலக்ஸ்மி (ஜேர்மனி), றஜீவ் (ஜேர்மனி), சுசிலா (ஜேர்மனி), டினேஷ் (மாணவன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), அபினேஷ் (மாணவன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), சங்கீதா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), சங்கவி (யா/புனித ஜோண் பொஸ்கோ மாணவி), சரிகா (யா/புனித ஜோண் பொஸ்கோ மாணவி),ஆரதி, ஜெயப்பிரிதா (ATI மாணவி), போல் நிரோஷன் (மாணவன், யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-01-2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ராஜபவனம்',*
*514, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.:- 0777 759205,
0777 222635

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-40207)(26)

**புதிய கல்வியாண்டு-2005**
தரம் 1 முதல் O/L வரை ஆரம்பம் ஜனவரி 5 முதல் (புதன் 3.00 p.m.) பிரிவு 2
✧ இவ்வருடத்துக்கான இறுதிப் பிரிவு
✧ மாதாந்த, தவணைப் பரீட்சை நடைபெறும்.
✧ ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் மட்டும்
அனுமதிகள் ஜனவரி 15வரை
அனுமதிக்கு முந்துங்கள்
GR.-6,7,8 ENGLISH MEDIUM
வகுப்பு ஆரம்பம் - ஜனவரி 5 (புதன்)
நாவலர் இன்ஸ்ரிரியூட் ஆனைப்பந்தி, யாழ்நகர்.
(40406)

**கடல்வள அபிவிருத்தி நிலையம்**
**விஞ்ஞானபீடம்,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**
**மீன்பிடியியல்**
**விஞ்ஞான டிப்ளோமா - 2004**

ஒத்திவைக்கப்பட்ட மேற்படி டிப்ளோமா கற்கை நெறியின் முதலாவது அரையாண்டுப் பரீட்சை 10.01.2005 முதல் 12.01.2005 வரை விஞ்ஞான பீடத்தில் நடைபெறும். கால அட்டவணையை விஞ்ஞானபீட விளம் பரப்பலகையில் பார்வையிடலாம்.

(சி-40210) - துணைவேந்தர்.

**கண்ணீர் அஞ்சலி**



அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் அதிபரும் எமது பாடசாலையின் நல்லாசன் திரு.மு.இராஜவரோதயம் அவர்களின் பாசமிகு தந்தையாருமான

**கந்தப்பு முருகேசு**

அவர்கள் காலமாகிவிட்டார். அவரது இழப்பு பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயரக் கடலில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், அமரருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தேசப்பு அருள்நந்தி வித்தியாலயம், அச்சுவேலி. (40419)

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் அபிவிருத்திச் சங்கத்தினர்.

**விஞ்ஞானபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**அறிவித்தல்**
விஞ்ஞான பீட கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 10.01.2005 திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.
(சி-40211) - துணைவேந்தர்.

**D.C.M.**

வணிக, முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கல்லூரி

**A/L - 2007**

கலை வித்தகம்

ஆரம்பம்:

09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | - வரதராஜன் |
| கணக்கீடு | - பாலவாசன் |
| வணிகக்கல்வி | - உமாகாந்த் |
| தமிழ் | - நாக. தமிழிந்திரன் |
| இந்துநாகரீகம் | - ஸ்ரீஸ் |
| அளவையியல் | - சுதன் |
| புவியியல் | - குமரன் |
| ஆங்கிலம் | - நிஷாந்தன் |

எம்முடன் இணைவோர் உயர் கல்வி பெறுவது நிச்சயம்

## விக்னா கல்வி நிறுவனம்

A/L 2007 கலை வர்த்தகம்

| | |
|---|---|
| Acc. | - திரு.பாலவாசன் |
| Bi.St. | - திரு.யசோ (பிரிவு I) |
| | - திரு.முரளி (பிரிவு II) |
| Log. | - திரு.சயந்தன் |
| Tam. | - திரு.குழந்தை (பிரிவு I) |
| | - திரு.லிங்கம் (பிரிவு II) |
| Geo. | - திரு.பாபு |
| Hist. | - திரு.பத்மன் |
| Chri. | - திரு.வசந்தன் |
| Eco | - திரு.உதயன் |
| H/C. | - திரு.பத்மராஜா |
| Hin. | - திரு.N.T.தரன் |
| P/sci. | - திரு.ஸ்ரீரங்கநாத் |
| Drama. | - திரு.மதி |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்: 08.01.2005 8மணி (சி-40208) (43-14-17)


## முகாம்களிலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதற்கு நடவடிக்கை

கொடிகாமம்ஜன4

சுனாமி கடல் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் முன்பள்ளி சிறார்களின் கல்வி, போசாக்கு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் தென்மராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினர் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் முன்பள்ளி கல்வித்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாகத் தென்மராட்சி வறணி மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள 47 மாணவர்களுக்கான கல்வியைப் புகட்டும் முயற்சியில் 8 ஆசிரியர்கள் முன் வந்து அப்பணியைத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை 8 மணிக்குத் தென்மராட்சி சுனாமி அனர்த்த புனரமைப்புக் குழுச் செயலாளர் கோகிலன் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்செயற்றிட்டம் தென்மராட்சியில் உள்ள அனைத்து இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என தென்மராட்சி வலய கல்வி இணைப்பாளர் இ.சிவதர்மிகா தெரிவித்தார்.

(8-74)


## பணிமனை இணைப்பாளர்

கிளிநொச்சியில் உள்ள உதயன் பணிமனையின் இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே இத்தகைய நிர்வாகப் பணிகளில் அனுபவம் உள்ளவர்கள் மிகவும் விரும்பப்படுவர். வெளிக்களப் பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளிநொச்சி நகரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முதலிடம் உண்டு.

வயதெல்லை: 30 முதல் 50 வரை
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
விண்ணப்ப இறுதிநாள்: 09-01-2005

உதயன் மனிதவள சேவை,
381, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-40168)(26-14-18)


## இதய அஞ்சலி

எமது அன்பிற்குரிய
ச. திருச்செல்வராஜன் *(உரிமையாளர், சதாஸ் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)*
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சரஸ்வதி சதாசிவம்**



அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திர்ஷிகா கலைக்கூடம்,
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.

விஸ்வப்பிரம்மஸ்ரீ
ந.சற்குருநாதன் (குரு)
ஆசாரியார் குடும்பத்தினர்.

(சி-40216)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா யோகம்மா



இல.50, இராணி வீதி, நல்லூர் வடக்கை வதிவிடமாகக் கொண்ட திருமதி கந்தையா யோகம்மா அவர்கள் 02.01.2005 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, செல்லம்மா மற்றும் தம்பிராசா, பத்மாவதி ஆகியோரின் சகோதரியும் தவலோகநாதன் (Canada), திவ்வியகுமார் (Canada), புவிராஜசிங்கம், காந்திமதி, கைலநாதன், மகேந்திரன், யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனி, பொபி ஆகியோரின் மாமியாரும் மிதுனன், கயேந்திரன், தனுசு ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2005) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.50, இராணி வீதி,*
*நல்லூர் வடக்கு.*

தகவல்:
பிள்ளைகள்.

(40423)(43-29-17)

### திருமதி மகேஸ்வரி திசைவீரசிங்கம்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மெசஞ்சர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி திசைவீரசிங்கம் அவர்கள் கொழும்பில் 02.01.2005 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாயபிள்ளை திசைவீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி இராசரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் தர்மலிங்கத்தின் (கனடா) சகோதரியும் காலஞ்சென்ற திரு.திருமதி கைலாயபிள்ளை தம்பதிகளின் மருமகளும் ஜெயலட்சுமி (பிரான்ஸ்), சுகிர்தலட்சுமி (கொழும்பு), தவலட்சுமி (ஜேர்மனி), தவராஜசிங்கம் (பிரான்ஸ்), கிருபாலட்சுமி (கொழும்பு), கமலவேணி (கொழும்பு), திருக்கைலாயவாசன் (சுவிஸ்), யோகலட்சுமி (கனடா), தவக்குமார் (லண்டன்), லோகநாதன் (நியூ ஓபததா, புறக்கோட்டை - கொழும்பு), குகதாஸ் (நெதர்லாந்து), சுவேந்திரன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் க.கார்த்திகேசு (பிரான்ஸ்), காலஞ்சென்ற இகுணராசா (வி.கனகலிங்கம்பிள்ளை அன்சன்ஸ் - கொழும்பு), ரி.செல்வவிநாயகம் (ஜேர்மனி), ரேவதி (பிரான்ஸ்), சி.லோகநாதன் (லீலாகுறூப், கொழும்பு), சி.தனபாலா (லீலாகுறூப், கொழும்பு), வக்சலா (சுவிஸ்), வி.பாலசுப்பிரமணியம் (கனடா), சித்ரா (லண்டன்), ஜீவராணி (கொழும்பு), உமாகாந்தா (நெதர்லாந்து), வகிதா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.64,மெசஞ்சர் வீதி,*
*கொழும்பு - 12,*
*தொலைபேசி:0776117196*

தகவல்:
சகோதரன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி-40213)(43-17-29)

### துரையப்பா இராசரட்ணம்

தெல்லிப்பழை, விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் மானிப்பாயில் வசித்தவருமான துரையப்பா இராசரட்ணம் அவர்கள் 02.01.2005 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் நாகபூசணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியப்பிள்ளை, பூரணப்பிள்ளை மற்றும் பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவகுரு, விநாயகமூர்த்தி, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் குணலட்சுமி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), ரஞ்சினி (வலயக்கல்வி அலுவலகம் - மருதனார்மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பழனிநாதன், பிறேம்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன், வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நேற்று (03.01.2005) திங்கட்கிழமை மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய்.*

தகவல்:
அ.வி.பழனிநாதன் (மருமகன்).

(40427)(43-17-29)

## இலங்கை, மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 05.01.2005 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

***ஆடியபாதம் வீதி:***

கொக்குவில் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை, மருத்துவபீடம், பொற்பதி வீதி, கோணாவளை வீதி, கோயில் வீதி (கோண்டாவில்), கொக்குவில் மேற்கு மணியர்பதி.

***கே.கே.எஸ். வீதி :***

குளப்பிட்டிச் சந்தியிலிருந்து நாச்சிமார் கோயில்வரை, சிவப்பிரகாசம் வீதி, கேசாவில் பிள்ளையார் வீதியிலிருந்து லோட்டஸ் வீதி வரை.

***யாழ்ப்பாணம்:***

ஓட்டுமடம் வீதி, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் வரை.

மின் பொறியியலாளர்,
யாழ்.பிரதேசம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
' இலங்கை மின்சார சபை.

(சி-40214)(29-43-14-17)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

யாழ்.குருநகர் V.R.R. மினிசினிமாவுக்கு முன்பாக அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பில் CD யைப் பரிசாகப் பெற்ற சீட்டு இல.107 இற்கு உரியவர் உடன் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ளவும்.

25, சென்.பற்றிக்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

T.குமார்.

(40420)


பிரத்தியேக வகுப்பு
A/L 2007

பொருளியல்
**S.வரதராஜன்**

ஆரம்பம்:07.01.2005
வெள்ளி 4.00 (ப.நே.)

D.C.M.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-40195)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது கா.நேரம்: 10.30, 2.30, 6.30.,9.30 (பு.நே.)

**ANACONDA-2**
(ஆங்கிலப்படம்)

விரைவில்
ஈழத் திருநாட்டின் தாவடியின் மைந்தன் ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, விஜயகுமார் நடித்த
**ராமகிருஷ்ணா**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அஜித் (இருவேடம்), பூஜா நடித்த
**அட்டகாசம்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 AIR FORCE - 1(ஆங்கிலம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

❑ விஜயகாந் ❑ லய ❑சீதா ❑சரத்பாபு
❑ ராதாரவி நடித்த
**கஜேந்திரா**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
❑ அர்ஜுன் (இருவேடம்)
❑ சாயாசிங் ❑ லைலா
❑ வடிவேல் நடித்த
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)



**ஜெய் சூர்யா**

(C/39664)


## 3 ஆம் ஆண்டு நினைவுகளில்...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 04 - 1921 | 06 - 01 - 2002 |



### அமரர் முத்தர் ஆறுமுகம்

(சமாதான நீதிவான்)
திதி:அட்டமி (04.01.2005)

அன்பின் திருவுருவாய் அகிலத்தின் ஒளிவிளக்காய் அன்பு காட்டி
அரவணைத்து எம் வாழ்வுக்கு வழிகாட்டிய அப்பாவே!
விண்ணக வாழ்வில் மூன்று வருடங்கள் ஆகிடினும்
மறக்காது எம் நெஞ்சங்கள்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*"திருவள்ளுவர் வீதி"*
*வேலணை மேற்கு,*
*வேலணை - 6.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(40426)(43-14-17)

# சேதுசமுத்திரத் திட்டத்துக்கு சுனாமியால் பாதிப்பில்லை

## இந்திய மத்திய அமைச்சர் பாலு தெரிவிப்பு

சுனாமி பேரலைகளின் பாதிப்பு சேது சமுத்திரம் அமைக்கும் திட்டத்தில் எவ்வித பின்னடைவுகளையும் ஏற்படுத்தவில்லை. திட்டமிட்டபடி சேதுசமுத்திர வேலைத் திட்டங்கள் உரிய காலத்தில் ஆரம்பிக்கப்படும் என இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு தெரிவித்தார்.

சேது சமுத்திரம் அமையவிருக்கும் கடற்பகுதிக்கு நேற்று நேரில் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டி.ஆர்.பாலு, செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

130 கோடி ரூபா செலவில் இந்தத் திட்டத்தைப் பூர்த்திசெய்ய இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. தென்னாசிய நாடுகள் இந்தத் திட்டத்துக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்துள்ளன. தென்னாசிய நாடுகளும் இத்திட்டத்தில் இணைந்து செயற்படவுள்ளன.

சுனாமி பேரலைகள் பற்றி எவ்வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை. ஆபத்திலிருந்து தம்மை எப்படிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி மக்கள் நன்கு உணர்ந்துள்ளன. எதிர்காலத்தில் அவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்வார்கள் - என்றார் அவர். (எ-க)

# இந்தியத் தூதரகம் விளக்கம்

கொழும்பு,ஜன.4

'அமெரிக்கப் படைகளின் இலங்கை வருகையால் இந்தியா சீற்றம்' - என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் முன்பக்கத்தில் வெளியான முகப்புச் செய்திகுறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விளக்கக் குறிப்பு ஒன்றைத் தெரிவித்திருக்கின்றது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

1.இந்த விடயம் குறித்து நாங்கள் (இந்தியா) இலங்கை அரசிடம் எந்த விவகாரத்தினையும் கிளப்பவில்லை.

2.இது இலங்கை - அமெரிக்க அரசுகளுக்கு இடைப்பட்ட விவகாரம்.

3.இந்தியா தொடர்ந்தும் இதே ஈடுபாட்டுடன் எதிர்வரும் நாள்களிலும், மாதங்களிலும் நிவாரணப் பணிகளை மேலும் முன்னெடுக்கும். இலங்கை அரசு சுட்டிக்காட்டும் திட்டங்களுக்கு அமைய இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகள் வழங்கும். நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் சகல அணிகளும் மிக நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பணியாற்றும் பொறுப்புடையவை என்பதும் முக்கியமானதாகும்.


- என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:-

1.நேற்றைய உதயனில் பிரசுரமான சம்பந் தப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் கருத்தும் இந்தக் குறிப்பின் மூலம் திட்டவட்ட மாக மறுக்கப்படவில்லை.

2.உதயன் தன்னுடைய மூலச் செய்தியின் நிலைப்பாட்டிலேயே உள்ளான். (எ)





ஆசிய, ஜேர்மன் நாடுகளில் விளையாட்டுப் பரிமாற்றத்திட்டத்தின் தலைவர் டைற்மன் டொறிங் மருத்துவ உபகரணங்களை யாழ். வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். ரவிராஜிடம் கையளிப்பதையும் அருகில் ஜயலத் ஜெயவர்த்தன எம்.பி. நிற்பதனையும் -

மேற்படி குழுவினர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறும் சிறுவர்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வசந்த[illegible])

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எனத் தெரிவித்தனர்.

அத்தோடு, இயற்கைப் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களின் புனர்வாழ்வு, மீள்கட்டமைப்புப் பணிகளுக்கு நோர்வே தன்னாலான உதவிகளை வழங்கும் என்றும் உறுதி கூறினர்.

இத்துயர் பகிர்வு ஒன்றுகூடலில் பேரலையின் கோரத்தினால் உயிர்நீத்த மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் சுடரேற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நோர்வே அரச பிரதிநிதிகளின் உணர்வுப் பகிர்வும், சர்வமத குருமார் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் உணர்வுப் பகிர்வும் இடம்பெற்றன. (எ-க)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத்தில் அமைப்புக்களை உருவாக்கி அவை மூலம் நிவாரணப் பணியை முன்னெடுக்கலாம்.

✪கேள்வி: புலிகளின் பிரதேசத்தில் எவ்வாறு நிவாரணப் பணி முன்னெடுக்கப்பட வேண்டும்?

☆ரணில்: அங்கும் இது பொருந்தும்.

வன்னியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - உடனடி மீட்புப்பணியை யார் முன்னெடுத்தார்களோ அவர்களிடம்தான் நிவாரணப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டும். புலிகள் உள்ளூர் மக்களை இணைத்து அப்பணியை முன்னெடுப்பார்கள்.

✪ கேள்வி: தங்கள் பிரதேசத்தில் நிவாரணப் பணி தங்களின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சர்வதேச சமூகத்தினதும் அரசினதும் ஒத்துழைப்பை இணைத்துக்கொண்டு அப்பணியை முன்னெடுக்கத் தாங்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் புலிகள் எதிர்பார்க்கிறார்களே....?

☆ ரணில்: நான் அதற்கு மாறாகக் கருத்துக் கூறவில்லையே! அந்தப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அரசுப் படைகளோ, பொலீஸாரோ அங்குசெல்லமுடியாது. எனவே, புலிகள்தான் அந்தப் பணியை அங்கு முன்னெடுக்கமுடியும்; முன்னெடுக்கவேண்டும்.

அரசின் முகவர்களாக அங்கு அரச அதிபர்களும் ஏனைய அதிகாரிகளும் உள்ளனர். அவர்களையும் உள்ளூர் மக்களையும் இணைத்துக்கொண்டு புலிகளே இந்தப் பணியை முன்னெடுக்கமுடியும்.

எனவே, இது விடயத்தில் புலிகளின் கருத்துக்கு - எதிர்பார்ப்புக்கு - முரணாக நான் எதையும் கூறவில்லை.

அந்தந்தப் பகுதி மக்களிடம்தான்அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. (எ-க)

## இத்தாலி தூதரகமும் நிவாரணம் வழங்கும்

கிளிநொச்சி,ஜன.4

வன்னியில் கடற்பெருக்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இத்தாலித் தூதரகம் ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களைக் கையளிக்கவுள்ளது.

இன்று காலை கிளிநொச்சி வருகைதரும் தூதரக அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் நிவாரணப் பொருள்களைக் கையளிப்பர் எனக் கூறப்பட்டது.

(எ)

## அந்நியப் படைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கரையில் தரித்து நிற்குமா?" - என்று அவரிடம் கேட்கப்பட்டது.

அது இலங்கைத் தரப்பு முடிவெடுக்க வேண்டிய விவகாரம் - என அவர் பதிலளித்தார்.

பிரிட்டனும் தமது துருப்பினர் அடங்கிய இரு கப்பல்களை இலங்கைக்கு அனுப்புகின்றது என்று கூறப்படுகின்றது.

பங்களாதேஷும் தனது கடற்படையின் ஒரு கப்பலை படையினருடன் இலங்கைக்கு அனுப்புகின்றது. நேற்றுமுன்தினம் இந்தக் கப்பல் பங்களாதேஷ் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது.

சி-130 சரக்கு விமானம் ஒன்றையும், விமானப்படை ஹெலி ஒன்றையும் கூட பங்களாதேஷ் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. (எ-க)

## அமெரிக்காவிடமும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எமக்கு உதவ முன்வந்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசுக்கு நான்நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறான தோர் அனர்த்தம் அங்கு இருக்கும்போதுகூட முதலாவதாக இந்திய அரசின் உதவிகள் எமக்குக் கிடைத்தன.

கடந்த வியாழக்கிழமை என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இந்தியப் பணத்தில் 100 கோடி ரூபா நிதியுதவி வழங்குவதாக உதவியளித்தார். பாதிப்பு ஏற்பட்ட உடனேயே புதுடில்லி விசேட விமானங்கள் மூலம் மருந்துப் பொருள்களைக் கொழும்புக்கு இந்தியா அனுப்பியது.

சுனாமி கடற்கொந்தளிப்புத் தொடர்பிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருக்க வேண்டும். எமது பிராந்தியத்தில் அவ்வாறு முன்னெச்சரிக்கை அறிவிக்கும் செயற்பாடுகள் எதுவும் கிடையாது. இதுபற்றி நான் இந்தியப் பிரதமருடன் உரையாடினேன். அவ்வாறான செயற்பாடுகளை மிகவிரைவில் மேற்கொள்வதென நாம் உறுதி பூண்டுள்ளோம் - என்றார் ஜனாதிபதி. (எ-க)



தொடர்ச்சியாக வேலை வழங்கக்கோரி கட்டடத்திணைக்கள அமைய ஊழியர்கள் நேற்றுத் தமது திணைக்களம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: வசந்தன்)

## ஜே.என்.டிக்ஸிற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்தும் உயரிய மதிப்புகளோடு விடயங்களை அவர் பதிவுசெய்திருந்தார்.

2003 ஆம் ஆண்டு முதல் அவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் வெளியுறவுத் துறைப்பிரிவுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். அக்கட்சியில் தேர்தல் அறிக்கையில் வெளியுறவுக்கொள்கை, பாதுகாப்பு மற்றும் இந்தியப் பாதுகாப்புத் தொடர்பான அம்சங்களை வரையறுத்தவர் அவரே.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பேற்றதும் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக அவர் நியமிக்கப்பட்டார். (எ-க-7)

## ஆழிப்பேரலைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டுக் காணாமற்போயுள்ள 52 படையினர் பற்றி நேற்றுவரை எவ்வித தகவலும் கிடைக்காத காரணத்தால் அவர்களும்கொல்லப்பட்டிருக்கலாம் என இராணுவத் தலைமையகம் சந்தேகம் தெரிவித்தது.இதன்படி, 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். யாழ். குடாநாட்டுக் கடற்பரப்பில் 54 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவரை ஒருவர் காப்பாற்ற முற்பட்ட சமயத்திலேயே அநேகமானோர் அலையினால் அடித்துச்செல்லப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. காய மடைந்த 150 இற்கும் மேற்பட்ட படையினர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

(எ-க)

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
A/L 2007
05.01.2005 (Wed) எல்லாப் பாடங்களும் நடைபெறும்.
CHE - 9.30 -10.30 PHY - 10.30-11.30
C.Maths/ Bio - 11.30 - 12.30
திரு.அன்பழகனுடைய இரசாயனவியல் கருத்தரங்கு
06.01.2005 நடைபெறும். (சி 40217)

கலையகம்
ஆவரங்கால்
SPOKEN ENGLISH BY: Britto
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.01.2005 புதன் 10.30 மணி.
பழைய பிரிவு
புதன் 9.30 மணி. (40148)

அறிவொளி - நல்லூர்
இணைந்த கணிதம்
A/L 2007
ஆரம்பம்: 05.01.2005 புதன் - 3 p.m. (ப.நே.)
B.ரவீந்திரன் B.Sc.

ENGLISH CLASSES
ஆண்டு 9,10,11 மாணவர்களிற்கான
ENGLISH LANGUAGE
ENGLISH LITERATURE
புதியவகுப்புகள் ஆரம்பம்:
09.01.2005 (39907)
ஆசிரியர் S.தெய்வதவபாலன்
மேலதிக விவரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021-222-3335, 0773 086716

MCS
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.
பதிவுகள் 07/01/2005 இற்கு முன் நேரில்
இலவசக்கணனிப்பயிற்சி
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.